வெளியீடு 6.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

ஆக்கியோன்:

Hon. பெர்ட்டிரண்ட் ரஸல் M. A., F. R. C. S.,

மொழிபெயர்ப்பாளர்:

C. K. மருதாச்சலம் B. A.,

வெளியிடுவோர்:

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்,

ஈரோடு.

[அணா 3.

1934.

வெளியீடு 6.

மதம்

மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

ஆக்கியோன்:

Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A., F. R. C. S.,

மொழிபெயர்ப்பாளர்:

C. K. மருதாச்சலம் B. A.,

வெளியிடுவோர்:

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்,

ஈரோடு.

1934.

சென்ட்ரல் பிரஸ்,
ஈரோடு.

பிரசுரிப்போர் முன்னுரை.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன? என்னும் இந்நூல் அறிஞர் பெர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் Has Religion made any useful contribution to civilization" என்று நிகழ்த்திய ஒரு சொற்பொழிவாகும். இஃது தோழர் C. K. மருதாச்சலம் B. A., அவர்களால் 1933-ல் மொழிபெயர்க்கப்பட்டு "குடிஅரசில்" வெளியிடப்பட்டது.

இந்நூலில் மக்கள், மதம், கடவுள், ஆத்மாமுதலிய வற்றின்மீதுகொண்ட மூடநம்பிக்கையையும், அதனால் மக்களுலகத்திற்கு விளையும் கேடுகளையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தர்க்க பூர்வமாய் விளக்கப்பட்டிருக்கிறது.

இந்நூலை மொழிபெயர்த்துக்கொடுத்த C. K. மருதாச்சலம் B. A., அவர்கட்கும் இதை வெளியிட அனுமதித்த குடி அரசுப் பதிப்பகத்தார்க்கும் நமது நன்றியுரித்தாகுக.

ஈரோடு,
9—2—34. } பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகத்தார்.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

—:o:—

"தர்க்கரீதியான ஓர் ஆராய்ச்சி"

மதத்தைப் பற்றிய எனது அபிப்பிராயமும் லுக்ரய்டியஸ் [Lucrytius] என்பாருடைய நோக்கமும் ஒன்றே. மதம் என்பது பயம் என்னும் வித்திலே தோன்றி எண்ணவொண்ணாத இன்னல்களை மக்களுக்களிக்குமோர் கொடிய வியாதியாகவே நான் கருதுகிறேன். ஆனால் இந்த நாகரீக உலகத்தில் மாந்தருடைய முன்னேற்றத்திற்கு ஒரு சிறிது உதவி மதத்தாலேயும் கிடைத்திருக்கின்றதென்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அவை என்ன? ஆதிகாலத்திலே, அந்தந்த வருஷத்திய காலப் பாகுபாடுகளைக் கணித்து நிர்ணயம் செய்யவும்; ஈஜிப்ட் (Egypt) மதாச்சாரியர்களைச் சூரிய சந்திர கிரகணகாலத்தை வெகு ஜாக்கிரதையாகக் குறிக்கச்செய்து, அதன் மூலமாக எந்த நிமிஷத்தில் எந்த கிரகணம் ஏற்படப்போகின்றதென்பதாக முன்னுடியே நிர்மாணிக்கும் அவ்வளவு திறமையை அவர்களுக்கு அளித்ததும் ஆகிய இந்த இரண்டு நன்மைகளும் நமக்கு அப்போது ஏற்படக் காரணபூதமாக இருந்தது என்பதை நான் அங்கீகரிக்கின்றேன். ஆனால் அவையிரண்டேயன்றி, ஏனைய நன்மைகள் எவையும் இருப்பதாக எனக்குப் புலப்படவில்லை.

"மதம்" என்ற இந்த வார்த்தை ஓர் அர்த்த புஷ்டியற்ற சொல்லாகவே பலராலும் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. புராட்டஸ்டெண்ட் (Protestant) கிறிஸ்து மதப் பற்றுள்ளவர்கள் இதனைத் தங்களுடைய முக்கியமான சொந்த சித்தாந்தங்கள் அல்லது இந்த உலக இயற்கையின் சம்மந்தமான கொள்கைகள் ஆகியவைகளைக் குறிப்பதற்காகத்தான் உபயோகித்து வருகின்றனர். ஆனால் இவ்வித அர்த்தந்தான் ஆதியில் இப்படித்திற்குண்டானது என்பதற்குச் சரித்திர சம்மந்தமான ஆதாரம் இல்லை. ஆதியில் மதம் எனும் சொல் ஒரு ஜனசமூகத்தின் வாழ்க்கை நிலையைக் குறிக்கவே தோன்றியதாகத்தான் தெரிகின்றது. (மேல்நாட்டிலே) தங்களுடைய சொந்த சித்தாந்தங்களையே ஆதாரமாகக் கொண்ட பல மதாச்சாரியர்களாலேயே அனேக கிறிஸ்தவ திருச்சபைகள் (Churches) ஏற்பட்டிருந்தபோதிலும், அவ்வித ஆச்சாரியர்களுக்கு அவரவர்களுடைய சொந்த திருச்சபைகளிலேயே செல்வாக்கில்லாமல் இருந்ததாகத் தெரிகின்றது. எனினும், அவ்வித திருச்சபைகள் அவை எந்தெந்த வகுப்பினர்களுக்காக ஏற்பட்டதோ அவர்களிடையே பிரபலமாக வளர்ந்தோங்கிவந்ததென்பது உண்மையே. மேல் நாட்டு மக்களுக்கு மிக்க ஊக்கத்தை விளைவிக்கக் கூடிய ஓர் உதாரணத்தையே நாம் எடுத்து ஈண்டு ஆராய்வோம்:—

கிறிஸ்தவ வேதங்களில் (Gospels) காணப்படும் ஏசுநாதருடைய அனேக உபதேசங்களுக்கும், தற்கால கிறிஸ்தவ மக்களின் நடபடிக்கைகளுக்கும் வெகு தூரம் என்பது அதனால் நன்கு வெளியாகும். சரித்திரம் அல்லது சமூக முன்னேற்றம் இவை இரண்டின் மூலமாக ஆராயுமிடத்து கிறிஸ்துமதம் பரவுவதற்கு முக்கியாம்சமாக விளங்கியவை

திருச்சபைகளே [Churches] யொழிய ஏசுநாதர் [Christ] அன்று என்பது வெளியாகின்றது. எனவே மக்களின் முன்னேற்றத்திற்காகக் கிறிஸ்துமதம் என்ன செய்துளது என்பதை ஆராயப்புக வேண்டுமானால், ஏசுநாதரின் கட்டளைகளை (Gospels) நாம் கவனிக்காமல், அம்மதத்தின் திருச்சபைகளுடைய விதிகளையே ஆராய வேண்டியது அவசியமாகின்றது. இப்போது, ஏசுநாதர் என்ன உபதேசித்திருக்கிறார்? என்பதைக் கவனிப்போமாக. 'உனது சொத்துக்கள் முழுதும் ஏழை மக்களுக்கே தானமளிக்கப்படவேண்டும். நீ பிறரிடம் சண்டையிடவே கூடாது. நீ சபைகளில் சம்மந்தப்படவே கூடாது. நீ விபசாரத்திற்கெனத் தண்டனையளிக்கக் கூடாது'—என்பதாகவன்றோ கட்டளையிட்டிருக்கின்றார். கத்தோலிக்கர் (Catholics) ஆனாலும் சரி, புராட்டெஸ்டெண்ட் (Protestants) ஆனாலும் சரி, எந்த கிறிஸ்தவனாவது அவர் கூறிய கட்டளைகளைக் காப்பாற்ற மனப்பூர்வமாக ஆசைப்படுகின்றானா? பிரான்ஸிஸ்கர் (Franciscars) களில் சிலர், மதாச்சாரியர்களின் தலைவராக இருக்கும் போப்புகளாவது [Popes] தரித்திர நிசையையே புருஷார்த்தமாக அங்கீகரித்து அனுஷ்டிக்க வேண்டுமென்பதாகக் கிளர்ச்சி செய்தார்கள் என்பது உண்மையே. ஆனால் ஆச்சாரிகளின் தலைவரான போப்-அவர்களை மதப் பிரஷ்டர்களாக்கியதோடு, அவர்களுடைய கொள்கையே கிறிஸ்து மதத்திற்கு மாறானதென்பதாகப் பிரசுரித்தார்கள்! இது நிற்க, "உன்னை நீ பிறர் எவ்வாறு தீர்மானிக்கக் கூடாதெனக் கருதுகின்றாயோ அம்மாதிரியே நீயும் பிறரைத் தீர்மானிக்காதே" [Judge not that ye be not Judged] என்ற ஏசுநாதருடைய உபதேசத்தையும் கவனியுங்கள். இன்குவிஷன் (Inquisition) என்னும் போர்முறை விவகாரங்களுக்கும் க்லூ—கிலக்ஸ்—கிளான்.

[Klu-Klex-Klan] என்பதாக அமெரிக்காவில் நடைபெறும் நூதன இரகசியக் கிளர்ச்சிகளுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கின்றதா என்பவைகளை ஆராய்விர்களாக!

கிறிஸ்து மதத்திலே மேற்கூறிய விஷயங்கள் எவ்வாறு பொருத்தமாக, உண்மையாக விளங்குகின்றதோ அவ்வாறே புத்தமதத்திலும் இருக்கின்றது. அன்பினதும், அருளினதும் உருவமே புத்தர். தன்னை மரணத்தை வென்ற மானிடன் என்பதாக, தவறுதலாக நம்பி ஏமாந்திருந்த தனது சிஷ்யர்களை நோக்கி, தான் மரணத்தருவாயிலிருக்கும்போது அவர் அன்னவருடைய மடமையை எள்ளி நகையாடினார். ஆனால் புத்தர்களோ அதிலும் முக்கியமாக திபெத் பீடபூமியில் இப்போது இருக்கும் புத்த மதாச்சாரியர்களோ வெளியில், மருளும், பெருமிதமும், கொடூரமும் ஒருங்கே உருவெடுத்தாற் போலவேதான் இருக்கின்றார்கள்.

கிறிஸ்துமத ஸ்தாபகரான ஏசுவின் உபதேசங்களுக்கும், கிறிஸ்தவத் திருச்சபைகளின் கட்டளைகளுக்கும் உள்ள எல்லாவித வேறுபாடுகளும் இயற்கையாக ஏற்படாமல், ஏதோ கால வித்தியாசத்தால் நேர்ந்திருக்க வேண்டும் என்பதாகத் தீர்மானிக்கவேண்டாம்.

ஓர் பரம தத்துவத்தை ஏதோ ஒரு மகான் பகிரங்கமாக வெளியிட்டவுடன், பல முக்கியஸ்தர்கள் உடனே ஒன்றுகூடி அவருடைய உபதேச வாக்கியங்களை விளக்க, முற்பட்டு விடுகின்றனர். அவ்வித பிரசாரகர்களிடத்தில்தான் உண்மை விளக்கத்தின் திறவுகோல் இருப்பதாக ஏற்பட்டுவிடுகின்றமையால், உடனே அவர்களுக்கு அபார சக்தி கற்பிதமாக ஏற்பட்டு விடுகின்றது. எனவே அவ்விதமாக உரிமை பெற்ற

வகுப்பினர்களெல்லாம், அந்தச் சக்தியைக் கொண்டே தங்களுடைய சுயநல முன்னேற்றத்தைப் பூர்த்திசெய்ய முற்பட்டு விடுகின்றனர். பிறப்புரிமை சொத்துரிமை முதலிய வேறு பல உரிமைகளால் மற்றவர்களைப் புறக்கணித்து மேம்பட்டு விளங்கும் பல வகுப்பினர்களைவிட, இந்தக் கடவுள் உரிமை பெற்ற வகுப்பினர்களால் மக்களுக்கு விளையும் தீங்கு பன்மடங்கு அதிகம் என்னலாம். ஏனெனில் இவர்கள் என்றென்றும் மாறாத ஒரே தத்துவத்தையே எக்காலத்தும் மேற்கொண்டு பிரசாரம் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றமையால், காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப முற்போக்கில் மாறுபாட்டையும் விஞ்ஞான ரீதியான, மாந்தர் நடவடிக்கைகளையும் முற்றிலும் அவர்கள் எதிர்த்து நிற்கவேண்டியவர்களேயாவர். இதனாலன்றோ இவர்கள் கலீலியோ (Galileo), டார்வின் (Darwin) போன்ற விஞ்ஞான விற்பன்னர்களை மதத்தின் சார்பாக எதிர்த்தனர்—ஏன்?—நமது காலத்திலும் ப்ருட் (Freud) என்பவரை திருச்சபைகள் எதிர்க்கவே செய்தன. மாந்தருடைய மனதறிந்த வாழ்க்கையை (Intellectual life-ஐ)க்கூட இந்தக் கிறிஸ்தவ திருச்சபையானது [Church] தகுந்த காலத்தில் தலையெடுக்காதபடி அமுத்தியே வந்திருக்கின்றது. கிறிஸ்தவ மதாச்சாரியர் தலைவரான கிரகரி மஹான் [Pope Gregory the Great] என்பார்—"நீர் இலக்கண நூலை [Grammar] சில நண்பர்களுக்கு போதிப்பதாக எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கின்றது, அதனை நாங்கள் ஆமோதிக்காது விடுவதோடு உமது செயலுக்காக மிகவும் விசனிக்கின்றோம்" என்பதைத் தலைமையாகக்கொண்டு ஒரு நீண்டநிருபத்தை எழுதியிருக்கின்றார். அந்த மதாச்சாரியர் [Bishop] தனது தலைவர் கட்டளையை மீற முடியாத அத் துஷ்கிருத்தியத்தை

அறிவை ஒழித்தார்! உண்மையில் பாஷா விருத்தி மேல்நாட்டில் மதப் புரட்சி [Renaissance] ஏற்பட்ட பிறகே மேலோங்குவதாயிற்று. மதமானது அறிவை மட்டும் அழித்ததோடு நில்லாமல், மாந்தரது ஒழுக்கத்தையும் [Morals] மாளச்செய்திருக்கிறது. நான் ஏன் அங்ஙனம் கூறுகின்றேனெனில், மதமானது மாந்தருக்கு ஆனந்தத்தை விளைவிக்கும் ஒவ்வொரு மார்க்கத்தையும், அதன் உபதேச நியதிகளால் தடைசெய்வதாலேயாகும். சில வருடங்களுக்கு முன்னர் ஜெர்மனி தேசத்தை ஆண்டுவந்த ஓர் அரசனைச் சிங்காதனத்தினின்றும் இறக்கியபோது அந்த அரசனுடைய குடும்பத்தாருக்கு அவர்களுடைய சொந்தச் சொத்துக்களைத் திருப்பிக் கொடுப்பதற்காக, சகல ஜனங்களின் சம்மதத்தை ஓட்டின் மூலமாக (Plebicite) கேட்டறிய அந்நாட்டினர் முற்பட்டபோது, ஜெர்மனி தேச கிறிஸ்தவத் திருச்சபை [Church] அவ்வாறு திருப்பிக்கொடுத்தால் ஏசுவின் கட்டளைக்கு முற்றிலும் மாறுபாடாகுமென்பதாகத் தனது அதிகார தோரணையில் விளம்பரம் செய்திருக்கின்றது. மேலும், மனிதர்களை மிருகங்களை போல் அடிமைகளாக விலைக்குவாங்கி வேலை கொள்ளும் கொடிய செயலைத் தவிர்க்க வேண்டும் என்பதாகக் கிளர்ச்சி ஏற்பட்ட போது அதையும் கிறிஸ்தவத் திருச்சபைகள் மதத்தின் பெயரால் எதிர்த்து நின்றதை நாம் அறியாமலில்லை.

ஒரு கைவிரல்களால் எண்ணக்கூடிய ஒரு சில முக்கிய திருச்சபைகளைத் தவிர ஏனையவை அத்தனையும், மக்கள் பொருளாதார சம்பந்தமான துறைகளில் மேலோங்குமாறு வேலை செய்யும் ஒவ்வொரு திருச்சபையும் மேலோங்காதபடி தடுக்கும் முறையிலேயே வேலைசெய்வதை இன்றும் காணலாம்.

கிறிஸ்துமதாச்சாரியர் தலைவரான [Pope] போப் என்பவரது அதிகார தோரணைகொண்ட சமூக நோக்கத்தை நாம் யாவரும் அறிந்தே இருக்கின்றோம்.

கிறிஸ்துமதமும் பெண்களும்.

பெண்ணுலகத்திற்குக் கிறிஸ்து மதத்தின் பேரால் ஏற்பட்ட கொடுமைகள் எண்ணற்றன. நேர்மையற்றதும் இயற்கைக்கு விரோதமானதும் அறிவுக்கு பொருந்தாதவைகளுமே அவற்றின் தன்மையாகும். ரோமாபுரியில் திருத்திபத்யம் சீர்குலைந்து சிதறுண்ட அக்காலத்தேதான் அவ்விய அநாகரீகக் கொள்கைகளின் தீமைகள் எல்லாம் அறிஞருலகத்திற்கு நன்கு வெளியாயின. 'பெண்கள் சமூகத்தைப் போற்றவந்தது கிறிஸ்துமதமே' என்பதாகப் பலர் பறை சாற்றித் திரிகின்றனர். இது மத அபிமானம் கொண்ட சரித்திரக்காரர்களால் குருட்டுத்தனமாகக் கட்டிவிடப்பட்ட புரட்டுக் கூற்றேயன்றி வேறல்ல. ஒருசிலரால் வேத வாக்கென வரையறுக்கப்பட்ட—மாற்ற முடியாத சில பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்ட பெண்ணுலகம், இயற்கையுலகில்—பகுத்தறிவுலகில் எல்லாத் துறைகளிலும் நலனுற்று மேன்மையடைவதென்பது எவ்வாறு இயலும்?

பெண்களை, "மக்களை மயக்கிச் சாத்தானிடம் சேர்ப்பிக்கும் தூதர்கள்" என்பதாகவும், "காமக்களஞ்சியமே அவர்தம் பிறவிக்குணம்" என்பதாகவுமே, சமயக்குரவர்களாம் கிறிஸ்துமதப் போதகர்கள் (Monks) எக்காலத்தும் பறை சாற்றி வந்திருக்கின்றார்கள். இன்னும், அவர்களைப்பற்றி மதப்பிரசாரங்கள் அதாவது திருச்சபைகள் (Churches) என்ன கூறுகின்றன? என்று பார்ப்போமானால் பெண்

களுக்குக் கன்னிகா நிலைமையே (Vriginity) பிரதானமாம்; அதாவது அவர்கள் என்றும் கணவரில்லாமல் கன்னிகாமட ஸ்திரீயாய் இருக்கவேண்டுமாம். அந்நிலையை அடைய சக்தி அற்றவர்களுக்குத்தான் இல்லற வாழ்வு ஏற்பட்டுள தாம்! "கனவிற் பாபத்துக்குப் பதிலாகக் கணவனைக்கொள்" (It is better to marry than to burn) என்பதாக அர்ச். பவுல் (St. Paul) எனும் கிறிஸ்தவ முனிவர் கூறியிருக்கிறார். இவ்வாக்கிலிருந்து, பெண்ணுலகத்தையும் இல்லற சுகத்தையும் இயற்கை இன்பத்தையும் எவ்வளவு கேவலமாகக் அடைந்தவர்கள் மதத்தின் பேரால் மதிக்கின்றார்களென்பதைப் பாருங்கள்.

மணவாழ்க்கையில் ஒருகாலத்தில் ஒன்றுபடநேர்ந்த இருவர் எக்காரணத்தைக்கொண்டும் எக்காலமும் பிரியவே கூடாதாம். இது திருச்சபைகளின் நியதி, மற்றும் அவ்வாறு வாழ்க்கை நடாத்தும் ஆண்—பெண் ஆகிய இருவருக்குமே இல்லற இன்பத்தின் இரகஸ்யங்கள் தெரியாதபடி அந்தக் கட்டளையிட்டிருப்பதால், அவ்வித மணத்தால் என்றும் துன்பமே ஒங்குமென்பதில் தடையென்ன? தவிர, முற்கூறிய மதப்பிரசார திருச்சபைகள் (Churches) கர்ப்பத்தடை செய்தலை (Birth Control-ஐ) மறுப்பதற்கெனக் கூறும் காரணத்திலிருந்தும் அவை பெண்ணுலகை நசியச் செய்யும் சதிமோசம் என்பது நன்கு வெளியாவதை கவனியுங்கள். ஒரு பெண் வருஷமோர் குழந்தையாகத் தான் சாகும் வரையில் பெற்றுக் கொண்டே வருவாளானல் அவள் இல்வாழ்க்கையில் இன்பம் அடைய இடம் உண்டா? இல்லை. கிரமமாக கர்ப்பத்தடை செய்வாளாயின் அவள் வாழ்நாள் எவ்வளவு இன்பமாகக் கழியும் என்று பாருங்கள். இவ்வித இன்பத்தைத் தடுக்க

வேதான் அவர்கள் கர்ப்பத்தடையைக் கடிந்தெதிர்க்கின் றனர்.

கிறிஸ்துமதமும் பாபக்கூற்றும்.

கிறிஸ்து மதக்கோட்பாடுகளிலெல்லாம் அதிமுக்கியமாக விளங்கும் பாபம் என்பதைப் பற்றிய கொள்கை ஒன்றி ஞல் மாத்திரம் மக்களுக்கு விளைந்திருக்கும் சீரழிவு இவ்வளவு அவ்வளவு என்று சொல்லத் தரமன்று. இந்தப் பாழும் பாபத்தின் மேல் கொண்ட மூடநம்பிக்கையால், மாந்தர் தங் கள் கஷ்ட நிஷ்டூரங்களை வாய்விட்டுக் கூறவும் பயந்து சகித்துத் தவிப்பதோடு, அவை தம் தம் பாபகர்மத்தால் விளைந்த விதியெ னக்கொண்டும், அவற்றை எதிர்த்தல் தகாதெதன எண்ணி யும் சகலத்தையும் சகித்தலே அறிவுடைமையையும் வீரத்தன் மையும் ஆகுமென்பதாகக் கருதி, திருடனைத் தேள் கொட் டினர் போல், அந்தோ! திகைத்து வாடுகின்றனர்!!

இதனை விளக்க ஓர் உதாரணம் எடுத்தாள்வோம். மேனுட்டில் அநேகமாக எல்லாரையும் மேகபடை (Syphil-lis) எனும் நோய் வாட்டுகிறது. அதனை அறவே ஒழிக்க வேண்டும் என்பதாக நாம் பரிகாரம் தேடுகிறோம். அநேக மாக முன் ஜாக்கிரதையாகச் சில ஏற்பாடுகளைச் செய்து கொண்டால் எவரும் இந்த நோய் தன்னை அணுகாதபடி பாதுகாத்துக் கொள்ளலாம் என்பது சகலரும் அறிந்த விஷ யமே; ஆனல் கிறிஸ்தவர்கள் என்ன சொல்லுகின்றனர். இவ்வித முன் ஜாக்கிரதையாகச் செய்துகொள்ள வேண்டிய ஏற்பாடுகளைப்பற்றி அன்னவர்களுக்கு வெளியிடுதல் மஹா பாவம் என்பதாகவும், தங்கள் மதக் கொள்கைக்கு மாமுன தென்பதாகவும் நம்புகின்றனர். என்னெனில்—பாபம் செய்த

வர்கள் தக்கதண்டனையடைய வேண்டுமென்பதும், அதுவே மிக்க சிலாக்யம் என்பதுமே அவர் தம் மூடக்கூற்று. •அவனே மாத்திரம் கஷ்டப்படவிடுவதோடு மட்டுமா அவர்கள் கூற்று நிற்கின்றது என்று பார்த்தால் அவனுடைய மக்களும் கூட அந்தப் பாவிக்காகக் கஷ்டப்பட வேண்டுவதும் ஓர் நன்மையாம்! ஓர் நீதியாம்!

கிறிஸ்தவ உலகில் இந்நாளிலே பல்லாயிரம் குழவிகள், பிறந்த அந்நாளிலிருந்தே இரத்தத்திய மேகவியாதியினல் (Syphilis) அலமருகின்றனர் எனவே பாபிகள் பாதிக்கப்படுதலே நன்மை யென்பதாக மதத்தின் பெயரால் மதிகெட்டுக் கூறி வாளா நிற்கும் மூடக் கிறிஸ்தவர்களன்றோ, அந்த அரும் பாலகரின் தீராத கஷ்டங்களுக் கெல்லாம் காரணமாகின்றனர் கள். இவ்விதமான ஈவிரக்கமற்ற இராக்ஷஸ நடத்தைகளுக்கு இட்டுச்செல்லும் மத சித்தாந்தங்களால், மக்களின் மேனேக் கத்திற்கு எவ்வாறு விமோசனம் ஏற்படும் என்பதுதான் எனது கேள்வி.

மாந்தரின் வாழ்க்கை முறையைப் பற்றிய இவ்வித மான மத நோக்கங்கள் ஒருபுறமிருக்க, இல்லற இன்ப இரக சியங்களைப் பிறர்க்குப் போதிக்கும் விஷயத்தில் இந்தக் கிறிஸ் தவர்கள் கொண்டுள்ள மனப்பான்மையைப் பார்ப்போம். இதைப்பற்றிய இவர்கள் நோக்கம் மக்களின் பொது நலத் தைப்பெரும் பாலும் புறக்கணிப்பதாகவே இருக்கின்றது. காய்தல் உவத்தல் இல்லாது இவ்விஷயத்தைப் பற்றிக் கூர்ந்து பரிசிலனை செய்வோருக்கு—மதப்பற்று மிக்குடைய கிறிஸ்த வர்கள், தங்கள் மக்களுக்கு இல்லற இன்ப இரகசியங்கள் வெளிவராதபடி மதத்தின் பெயரால் தடை செய்வதால், விளை யும் தீமை நன்கு தெளிவுறும் என்பது திண்ணம். அதனுல்

அவர்களுடைய மனோ-தேக சுகங் குன்றுவதோடு மேற்படி விஷயங்களை உண்மைஞானமற்ற பிற மனிதர்களிடத்திலிருந்து அரைகுறையாகவும் ஒன்றிரண்டு மாறுபாடாகவும் கேட்டு; அதனால் அவர்கள் அல்லற் குழியிலாழ்ந்து அவதிப் படுதல் வெளிப்படை. இதனாலேதான் அச்சிறுவர்கள் மனதில், பெண்ணுலகம் கேவலமானது, கெடுதலானது என்ற எண்ணங்கள் வேரூன்றுகின்றன. ஞானம், அது எதுவாக இருப்பினும் மக்கள் அனைவருக்கும் அவசியமானதே யென்பதை எவரும் மறுக்க முடியாது. ஆதலின் எக்காலத்தும் எவரும், எந்த ஞானத்தையும் தடை செய்தல் தகாது. எல்லா ஞானங்களைவிட இந்த இல்லற இன்ப இரகசிய ஞானம் மக்களுக்கு இன்றியமையாததாதலின், இதை எக்காரணத்தாலும் தடை செய்தலே கூடாது. ஒருவன் ஒரு காரியத்தை பற்றிய உண்மைகள் ஒன்றும் தெரியாத போது அவன் செய்யும் தவறுதல்கள், அவன் அவற்றை யுணர்ந்தபோது அவ்வளவு செய்யமாட்டான். ஆதலின், உண்மை விளக்கம் எவருக்கும் உத்தம மானதே; இயற்கை உணர்ச்சியால் நிகழும் காரியங்களைப் பற்றிய, அவ்வித ஞானத்தைச் சிறுவர்களுக்கு விளக்கிக் காட்டாமல், பாபம் என்றும், சாத்தான் என்றும், விதியென்றும் கூறிப்பயத்தால் அவற்றை அழிக்க துணிதல் பேதமையேயாம்.

ஓர் புகைவண்டித் தொடரைக் காண ஆவல் கொள்ளாத குழந்தையும் உளதா? ஒரு சிறுவனிடம் தம்பி! நீ ரயில் வண்டியைப் பற்றி நினைக்காதே, அது மஹா கெடுதலாகும் என்பதாகக் கூறி, அவன் ரயில்வே ஸ்டேஷனில் இருக்கும் போதும் ரயில்வண்டியிலேறிப் பிரயாணம் செய்யும்போதும் அவனது கண்களைக் கட்டி வைத்து, ரயில் என்ற வார்த்தை

யைக்கூட அவன் கேட்கும்படியாக வேறெவரும் பேச விடாமல் பாதுகாத்து, அவன் எவ்வாறு ஒருவரிலிருந்து மற்றொருவருக்குப் போகிறான் என்பதைக்கூட ஓர் பரம இரகசியமாக அவன் மனதில் தோன்றுமாறு பல மாறுபாடான விஷயங்களால் போதித்து வருவதாக வைத்துக்கொள்வோம். இவ்வாறெல்லாம் செய்வதனால் ரயிலை நேரில் காணவேண்டுமென்ற அவா அவனிடம் குறைவு படுமா? ஒருக்காலும் குறைவு படாது. ஆனால், முன்னிருந்ததைவிட இப்போது பன்மடங்கு அதிகமாக ரயிலைப் பார்க்க வேண்டும்—பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவன் மனதில் கிளம்பும். எனவே இவ்விதமாகவே இயற்கையாகத் தன் மனதில் தோன்றும் ஆவலைப் பாபகர்மமானது என்பதாகப் பிறர் கூறும் ஒரு கொள்கையை அவன் எவ்வாறு மதிப்பான்? மிகக்கொடியதும், நியாய விரோதமானதும் இயற்கைக்கு மாறானதுமாக வன்றே கொள்வான். இவ்விதச் செய்கையால் புத்தி சாதுர்யமுடைய குழந்தைகள்கூட மனமுடைந்து கடைசியில் பித்தர்களாவார்களென்பது நிச்சயம். நிற்க, ரயில்வண்டியைப்பற்றி எவ்வித மனப்பான்மை நிகழ்வதாகக் கூறினேனோ அதே மனப்பான்மைதான், இருபாலரின் இல்வாழ்வைப்பற்றிய இரகசியத்தை மறைப்பதால் நேரும். ரயிலைப்பற்றிய விஷயத்தைவிட இந்த விஷயம் இன்றியமையாததாதலின், இதனால் நேரும் தீமை இன்னும் அதிகம். கிறிஸ்தவர்கள் ஆண் பெண் இருபாலரில் நல்ல பிராயமடைந்த ஒவ்வொருவரும் தற்காலத்தில் நரம்புத்தளர்ச்சியால் க்ஷீணித்திருப்பதற்குக் காரணம், அவர்கள் சிறுவயதாயிருக்கும்போது மதத்தின் பெயரால் இல்லற இரகசிய ஞானம் தடைசெய்யப்பட்டதால் அவர்கள் மனம் தெளிவுறாமல் மதிமயங்கி மாறுபட்ட வழிகளில் சென்று சிதைவுண்டதனாலேயே யெனலாம். இதனை

யில் இவர்களது மனதில் ஊன்றப்படும் பாபம் என்னும் வித்தே பிற்காலத்தில், கொடூரசிந்தை, பயங்கரம், மௌட்டீகம் முதலிய கிளைகளாகப் பரிணமிக்கின்றது. ஒரு சிறு குழந்தை, தான் இயற்கையாக அறிய ஆவல்கொள்ளும் எந்த விஷயத்தையும், பெரியோர் அவர்களிடத்திலிருந்து மறைத்தல் அறிவுடைமையாகாது. இவ்விஷயம் பிரதம பாடசாலைகளில் கையாளப்பட்டு மேலோங்குகிற வரையில் எந்த தேசமும் அறிவுடைய மக்களை யடைதல் இயலாது. ஆனால், கிறிஸ்துமதத்திருச்சபைகளால் தேசக் கல்வி ஸ்தாபனங்கள் ஆட்டப்படுகிறவரையில் இக்காரியம் நடைபெறுதல் குதிரைக் கொம்பே யாகும்.

நாம் முன்னர் குறித்த கிறிஸ்தவக் கொள்கைகளைப் பற்றிய எதிர்ப்புகள் ஒருபுறமிருக்க, இன்னும் நன்றாக விளக்கிக்கூறவேண்டுமானால் கிறிஸ்து மதத்தின் முக்கிய தத்துவங்களத்தனையும் காலதேச வர்த்தமானங்களுக் கேற்ப மாற்றப் படவேண்டியதே. அவ்வாறு மாற்றப்படுகிற வரையில் கிறிஸ்து மதத்தை அறிவுடையோர் எவரும் அங்கீகரிக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

கடவுள் இப்பூவுலகத்தைச் சிருஷ்டித்தார். அவர் அன்பின் உருவகம், சர்வவியாபி. இந்த உலகத்தைச் சிருஷ்டி செய்வதற்கு முன்னதாகவே இதில் கஷ்ட நிஷ்டூரங்கள் பல உற்பவிக்கும் என்பதை அவர் உணர்ந்தவரே; ஆதலின் இதன்கண் நடைபெறும் சமஸ்த காரியாதிகளுக்கும் ஆதி காரணம் கடவுளே. எனவே கஷ்டங்களெல்லாம் பாபத்தால் விளைந்தனவெனக் கூறுவதனைத்தும் நிஷ்பிரயோஜனமான வார்த்தைகளே யாகும். ஏனெனில் முதலாவதாக அக்கூற்று முழுப் பொய்யே. தீவினையனைத்தும் பாபத்தின் பலனெனின்—

1744

நீண்ட நதிகள் நிறைந்து நிலை தடுமாறுவதும், எங்கேயோ உள்ள எரிமலைகள் எதிர்பாராத விதமாக பூகம்பமாக எதிர்ப்படுவதும் இயற்கையின் இயல்பா? அன்றி பாபத்தின் பயனா? அவ்விதம் அவைகள் பாபத்தின் பிரதிபலனாகவே பரிணமிப்பதாக இருப்பினும், அவ்வகைத் துணிபால் நமக்கேற்படும் நன்மை என்ன? மனிதரைக் கொன்று மகிழ்தலை மாண்பாகக் கருதும் ஓர் மகனை, தான் மனமாற முன்னுடியே புணர்ந்து பெறுவனேல், அவனுற்றும் கொலைகளத்தனைக்கும் கர்த்தா, தானா-அவனா? எனவே கடவுள் மக்களைச் சிருஷ்டிப்பதற்கு முன்னரே அவர்கள் செய்யும் பாபகரமான அதிக்கிரமங்களை உணர்ந்திருப்பதாகக் கொள்வோமாயின், மக்கள் அவரவர் பாப வினைக்கேற்ப நடாத்தும் துஷ்கிருத்தியங்களின் பலாபலன் அவ்வகை மாந்தரைச் சிருஷ்டித்த கடவுளையன்றோ சாரும்? ஆனால் கிறிஸ்தவர்கள் தங்களது பாபக் கூற்றுக்கு ஆதாரமாகக் காட்டும் அத்தாக்ஷி யென்னவெனில் —இவ்வுலகத்திலே கஷ்டங்களை அனுபவிப்பதால்தான் ஒருவனுடைய பழைய பாப மூட்டைகள் செலவழிந்து தூய்மையுறுகிறான்; ஆதலின் கஷ்டங்கள் வருவன அனைத்தும் நமது நன்மைக்கே; எனவே கஷ்டங்கள் இவ்வுலகில் இருப்பது நாம் பாபிகள் என்பதற்கேற்ற சான்றும்.

கடவுள் பக்தியின் பெயரால் ஜீவஹிம்சை செய்வோரது அறிவின் திரிபே போல் இதுவும் ஓர் ஆதாரமற்ற கூற்றேயாம்.

உண்மைக் கிறிஸ்தவன் எவனாயினும் என்றேனும், பால் மணமாறாத பாலர்களிருக்கும் ஓர் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து, அவர்கள் படும் துயரத்தைக் கண்கொண்டு பார்க்கட்டும்.

அவ்வாறு கஷ்டப்படுவதற்கு அந்தக் குழந்தைகள் செய்த பாவங்கள் இன்னதென அவன் கைவிட்டுக் கூறிவிட்டு போகட்டும். அக்குழவிகளும் பாபந்தான் செய்திருக்க வேண்டுமென அவன் துணிந்து கூறுவானேல், அவனை அன்பும் அநுதாபமுடைய ஓர் மனுஷப் பிறவியாக நீங்கள் கருதுவீர்களா? சுருங்கக் கூறுமிடத்து, பாப துஷ்கிருத்தியங்களைச் செய்யுமாறு சிருஷ்டித்து அனுப்பிவிட்டு அவற்றைப் பதுங்கிப்பார்த்து மகிழும், அந்த நெஞ்சில் ஈரமற்ற கடவுளுக்கும், ஒரு பாவமும் அறியாத சின்னஞ்சிறு பாலர்களையும் பாபியென வாய்கூசாது கூறும் இந்த கிறிஸ்தவனுக்குமென்ன வித்தியாசமிருக்கிறதென்பதை நீங்களே யோசித்துகூறுங்கள். இவற்றிலிருந்து அறிஞர்கள் அறியவேண்டிய விஷயம் மூன்றேயாகும். (1) கடவுள் அறிவற்றவராதல் வேண்டும் அல்லது (2) மாந்தர் மதியிழந்தவராதல் வேண்டும். அல்லது (3) இந்தப் பாவக்கூற்று பொய்யாதல் வேண்டும். இம்மூன்றில் அறிவு உலகம் எதனை வேண்டுமானாலும் தீர்மானித்துத் தெளிந்துகொள்ளட்டும்.

நிற்க, கஷ்டநிஷ்டூரங்கள் நிறைந்த இந்நிலவுலகின்கண் நிகழ்வன யாவும் நமது நன்மைக்கே யெனும் நம்பிக்கையுடைய எவனும், தன்னுடைய பழக்கவழக்கங்களைச் சமய சந்தர்ப்பங்களுக்கேற்ப மாற்றாமல், ஒரே மாதிரியாக எக்காலத்தும் மேற்கொண்டொழுக முடியவே முடியாது. அவ்வாறு செய்ய முற்படுவானாயின் அவன் தனக்கேற்படும் கஷ்டங்கள் ஒவ்வொன்றிற்கும் மூலகாரணமாக ஒவ்வொரு பாபத்தைக் கற்பித்து அதற்காகக் கடவுளின் மன்னிப்பை எதிர்பார்த்துப் பார்த்து ஏமாந்து நிற்க வேண்டியதே.

மதத்தை நான் ஏன் மறுக்கிறேன்?

மதத்தைப்பற்றிய மறுப்புகள் இரண்டு உண்மைகளை ஆதாரமாய் வைத்து எழுதப்படுவதாகக் கூறலாம்—ஒன்று அறிவின் சம்பந்தமான உண்மை; மற்றொன்று பழக்க வழக்கங்களுக்கு அடிப்படையான கொள்கைகளின் சம்பந்தமான உண்மை.

அறிவின் சம்பந்தமான மறுப்பு என்னவெனின்,—மதத்தை மக்கள் நம்பவேண்டுமென்பதற்கு மதவாதிகள் கூறும் ஆதாரங்கள் பகுத்தறிவுக்கு பொருந்துமாறு இல்லை என்பதேயாகும். மதத்தின் பெயரால் தழுவப்படும் பழக்க வழக்கங்களைப்பற்றிய மறுப்பு எவ்வகையானதெனின், மதங்கள் என்பவை—மனிதர் மிருகங்களைப்போல் மனிதரை மனிதர் கொன்று தின்றுகொண்டு காடுமேடுகளில் நிர்வாணமாய் அலைந்து திரிந்தகாலத்தில் ஏற்பட்டனவாதலின், அவைகளின் கொள்கைகள் அனைத்தும் சகோதரத்வம், சமதர்மம் பொதுவுடமை முதலிய தற்கால நாகரீகக் கொள்கைகளுக்கு முற்றும் மாறுபட்டதாகவும், அக்காலத்திய மிருகத்தன்மையையே மேலாகப் பறை சாற்றுவதாகவுந்தான் இருக்கும் என்பதேயாம்.

பகுத்தறிவின் சார்பிலிருந்து எழும் எதிர்ப்புகளை இன்னும் விளக்கமாக எடுத்தாராய்வோம். பிரத்தியக்ஷப் பிரமாணங்களையே பெரிதென மதிக்கும் தற்கால நாகரீக உலகம், மதக்கொள்கைகள் உண்மையா? பொய்யா? என்பதைப் பொருட்படுத்துகிறதில்லை; பின்னர் எதைக் கவனிக்கிறதெனில் மதம் நமக்கு விளைவிப்பது நன்மையா தீமையா? என்பதையே. ஆனால் இந்த இரண்டு விஷயங்களும் ஒன்றை

பொன்று சார்ந்ததாகவே இருக்கின்றன. இந்த இரண்டு கேள்விகளுக்கும் விடை ஒன்றாகத்தான் கூறப்படலாமே யொழிய, ஒன்றை மறுத்து மற்றொன்றிற்கு விடை கூறுதல் பகுத்தறிவுக்கு ஏற்றதாகாது.

இதனாலேதான், நாம் கிறிஸ்தவராக இருக்கும்போது எவ்வெவற்றை நன்மைகள் என்பதாகக் கருதுகின்றோமோ, அவைகளையே நாம் கிறிஸ்தவரல்லாதாராக மாறும்போது நன்மைகளாக நம்புவதற்கு இடமில்லாமற் போகின்றது. நன்மையென்றால் அது எக்காலத்தும் எந்த மதஸ்தருக்கும் ஒரே தன்மையுடையதாகத்தானே இருக்கவேண்டும்? எனவே கிறிஸ்துமதம் நன்மையானதாகவும், அம்மதத்தின் பற்றை விட்டவர்களுக்கு அதுதீமையாகவும் இருக்கக்காரணமென்ன?

இதனால், தீமைகளை நன்மைகளாகக் கருதவேண்டிய நிலைமையில் மதம் மக்களை மயக்கி, பலவந்தப்படுத்தி வருகிறதென்பது விளங்குகிறதல்லவா? தவிர, ஒருவன் ஒருசிலகொள்கைகளை, அவைகளுக்கு ஆதாரமான அத்தாக்ஷிகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கட்டாயம் நம்பியே தீரவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்படுகிறபோது, அவ்விதப்பற்றுதலால், அவனுக்கு அக்கொள்கைகளுக்கு மாறுபட்ட ஆதாரங்கள் வெளிப்படும்போது அவற்றின்மீது குரோதமும், அவ்வித மாறுபட்ட ஆதாரங்களில் உள்ள உண்மையை ஓர்ந்து பாராமல், கண் மூடித்தனமாக இருக்கவும் அது அவனைச் செய்கின்றது. எனவே, இவற்றிலிருந்து மாந்தரின் அறிவை அழித்து, உணர்ச்சியை ஒடுக்கி, கண் மூடி வழக்கத்திற் [illegible] வருவது மதம்தான் என்று அழுத்தக் [illegible] என்ன இருக்கிறதென்பதை ஆராய்ந்து தெளிவீர்களாக.

நவீன ஆராய்ச்சியின் பயனாக நாம் அறிந்த விஞ்ஞான தத்துவங்களில் (Scientific Truths) பெரிதாய்ப் பற்றுதலிருக்க வேண்டுமே, நமது முன்னேற்றத்திற்கு அத்யாவசியமெனினும்—ஒருவனை அவன் சில தத்துவங்களை கட்டாயம் நம்பித்தான் ஆகவேண்டுமென்று மதத்திட்டம் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கி விட்டால், மேற்குறிப்பிட்ட விஞ்ஞான தத்துவங்களை அங்கீகரித்தல் என்பது அவனுக்கு எவ்வாறு இயலும்? அதனாற்றான் மதம் மக்களுக்கு நன்மை பயக்குமா? என்ற கேள்வியை ஆராய்வதற்கு முன், மதம் உண்மையா? என்பதைப் பரிசீலனை செய்தாக வேண்டுமென்பதாக முன்னர் கூறினோம். கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும், யூதர்களுக்கும் மதம் என்பதில் உள்ள அடிப்படையான தத்துவம் கடவுள் உண்டு என்னும் கருத்தேயாகும். மதத்தின் ஆதிக்கம் மேலோங்கியிருந்த அந்நாளிலே மட்டும் "கடவுள்" என்ற சொல்லிற்கு ஏதோ ஒரு தாத்பரியம் இருந்ததாகக் கொள்ளலாம்; ஆனால் இப்போதோவெனில் பகுத்தறிவு வளர வளர, உண்மை விளக்கம் ஓங்க ஓங்க, கடவுள் என்ற பதத்தின் அர்த்தம் படிப்படியாக மறைந்து கொண்டே போய், அப்பதத்திற்கே ஒரு அர்த்தமுமில்லாத—என்!—சொல்ல முடியாத நிலைமைக்கு இப்பொழுது வந்துவிட்டது. இந்த தர்க்கத்திற்கென ஓர் உதாரணத்தை எடுத்து விளக்குவோம். கடவுள் என்ற பதத்தை விளக்க, மாத்யூ அர்னால்ட் (Mathew Arnold) என்பார் கூறியுள்ள தாத்பரியத்தைப் பார்ப்போம்.

"மனித சக்திக்கு மேம்பட்ட—சரியான காரணங்களுக்கு ஆதாரமான ஓர் சக்தி"—என அவர் கடவுளை விளக்குகிறார். அவருடைய இந்த விளக்கத்தை விவரிக்கவே இன்

றார் பல விளக்கங்கள் வேண்டியிருக்கின்றன. இவ்
வித அவரது விளக்கத்தின் அர்த்தமின்மை இன்னும் நன்றாக
வெளியாகவேண்டுமானால் பின்னால் நான் கூறும் விஷயத்தை
நன்கு கவனியுங்கள். இந்த நீண்ட நிலவுலகில் நாமநுப
விக்கும் காரண காரியங்களைத் தவிர, வேறு உலகங்களில்
ஏதாவது நமக்கு வேலை இருக்கின்றதா? என்பதை அறிவின்
பிரகாசத்தில் நீங்கள் விசாரணை செய்தால் அவரது விளக்கத்
தின் நிலைமை வெட்டவெளிச்சமாகிவிடும். இதே மாதிரியாகத்
தான் கடவுள் என்ற பதத்திற்கு வெவ்வேறு—ஒன்றிற்
கொன்று மாறுபட்ட—மூளைக்கே புரட்சியைக்கொடுக்கக்கூடிய
—அறிவிற்கே எட்டாத பொருள்களை வெகு நளினமாகக்
கூறி வருகின்றார்களே தவிர, வேறு உண்மையை விளக்கும்
உரையை தெள்ளிதில் விளங்கும் வண்ணம் பகர்கின்றார்க
ளில்லை.

மதவாதிகள் மதத்தின் சார்பாகக்கூறும் தர்க்கம் சுருக்க
மாகக் கூறவேண்டுமானால் இதுவேயாகும்:—“நானும் எனது
நண்பர்களும் எவ்வளவு அபார புத்திநுட்பமும், நன்னடத்
தையும் உடையவர்களாக இருக்கின்றோம் பாருங்கள். இவ்
வளவு புத்திநுட்பமும், மேலான நடத்தையும் ஒருவித
காரணமும் இல்லாமல், ஏதோ அகஸ்மாத்தாக உற்பவித்த
தென நீங்கள் நினைத்துவிடவேண்டாம். எங்களைப்போன்ற
வர்களைக்கூட சிருஷ்டி செய்யக்கூடிய அத்தனை அபார சித்த
சக்தியும், மேலான குணாதிசயங்களையும் ஒருங்கே கொண்டு
ள்ள ஓர் பரம புருஷன் கடவுள் இருந்தாலொழிய இந்த உலக
மாகிய யந்திரத்தினின்றும் எங்களை உற்பத்தி செய்தல்
முடியவே முடியாது” என்பதேயாகும். இவர்கள் கூறும்
இந்தத் தர்க்கத்தில் எவ்வளவு உண்மை இருப்பதாக நினைத்து

அவர்கள் கூறுகிறார்களோ அந்த உண்மையை இவ்வுரைகளானது என் அறிவிற்குப் புலப்படுத்துகின்றதில்லை யென்பதை வெளியிட மிகவும் விசனிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்—ஏன்? இந்த உலகமோ மிகமிகப் பரந்ததோர் கோளமாகும்.

எட்டிங்டனை (Eddingtn) நாம் நம்பினால், அவர் கூறுவதுபோல் இவ்வுலகத்திலே மானிடப் பிறவியைவிட இதற்கு மேலாக வேறெந்தப் பிறவியும் இருக்கின்றது என்பதாக நினைக்கவே இடமில்லை. இவ்வுலகம் (Earth) அடக்கிக் கொண்டிருக்கும் பதார்த்தங்களின் (Matter) தொகுதிக்கும் உள்ள தாரதம்மியத்தை ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்கும் அதன் வித்தியாசம் இத்தகையதென்பது நன்கு விளங்கும். இம்மனிதனது உடலில் அடங்கியுள்ள அணுக்களே போல் எத்தனையெத்தனை கோடானகோடி அணுக்கள் இந்த நிலவுலகில் அடங்கியிருக்கின்றன பாருங்கள். எனவே சற்று நன்றாகக் கவனியுங்கள். இத்தனை கோடானகோடி அணுக்களிலிருந்து இத்தகைய மேலான அறிவாற்றலுடைய ஓர் மகன் உற்பவிப்பதென்பது சாதாரணமாக அகஸ்மாத்தாக நேரிடக்கூடாத சம்பவம் என்பதாக நினைக்க இடம் இருப்பினும்,—அத்தனை கோடானகோடி அணுத்திரள்களில் இத்தகைய அபாரசக்திகளையுடைய ஒரு சில அணுக்களாவது இருக்கக்கூடும்—என்பதாக நினைக்கவும் ஆதாரம் அங்கேயே இருக்கின்றதன்றோ! எனவே அவர்கள் கூறும் தர்க்கத்திற்கு ஆதாரமான உண்மையின்மை நன்கு விளங்குதல் காண்க.

மேலும், இந்நிலவுலகின் நறுங்கனியாகிய இந்த மானிடப்பிறவியை நான் ஒரு பிரமாதமாகக் கருதுகின்றதில்லை—

ஏன்? இங்குள்ள சாரசரப்பொருள்களில் காணும் அதிசயங்களுக்கெல்லாம் தலைமைபூண்டு நிற்கும் மானிடப் பிறவியில் இன்னும் மேலான சக்திகளும் அதிசயங்களும் இருக்க வேண்டும்—என்பதே எனது அபிப்பிராயம்.

ஆனால் நாம் கண்கூடாகக் காணும் தற்போதைய மாந்தர் நிலை, அத்தகைய—நான் நினைக்கும் நிலைக்கு மிகவும் தாழ்ந்தே இருக்கின்றது. எனினும், இப்போதுங்கூட என்னைவிட மிகச் சிறந்த மனிதர்களும்-ஏன்?—என் அறிவிற்கும் எட்டாத அத்தகைய அபார சக்தியையுடைய மக்களும் இவ்வுலகில் அனேகர் இருக்கின்றார்கள் என்பதையும் நான் நன்கறிவேன். அத்தகைய புருஷ சிரேஷ்டர்களின் தனித்தொகை ஒரு புற மிருக்க, மதவாதிகள் பறை சாற்றுவது போல் என்றும், சர்வ வல்லமையும், நிறைந்ததன்மையுமுடைய ஓர் தனிப் பெருங் கடவுள் இருந்திருப்பின்—அவர் ஆதிகாலம்முதல் இந்நாள்வரை சர்வ வியாபகமாகச் சதா உழைத்து வந்திருப்பது உண்மை யெனின்,—மக்கள் நிலைமையானது தற்காலத்தில் நாம் காணு மாப்போல் இராமல் சற்றுவது மேம்பட்டு விளங்கியிருக்கும் என்பதே எனது பூர்ண அபிப்பிராயம். தவிர, நாம் காணும் இந்த உலகத்தின் உன்னதம் எத்தன்மைத்து? ஒரு சிறுகின்னத்தில் மின்னலொளி பிரதிபலிப்பது போலவேதான் இருக்கின்றது. பார்க்கப் போனால் இவ்வுலகம், மாந்தர் நிரந்தரமாக வாழும் ஓர் வாசஸ்தலமாக இல்லை—ஏன்? ஒரு காலத்தில் நமது மனித உலகம் முற்றிலும் மறைய வேண்டியதே. விஞ்ஞான ஆராய்ச்சியால் நாம் அறியும் உலக தத்துவத்தின் (Energy) பிரகாரம்—அதன் சக்தியும் குறைவதில்லை பதார்த்தமும் (Matter) குறைவதில்லை. எனவே மாந்தர் இந்த உலகத்திலிருந்து ஓர் காலத்தில் மறைய வேண்டியதாக இருப்

பின் அந்தந்த உலக தத்துவத்திற் கேற்ப, அவ்வாறு இங்கு மறைந்த பதார்த்தங்களும், சக்திகளும் இந்த உலகத்திற்கு அப்பாற்பட்ட இடங்கள் (Planets) எங்கே போவது? மாறுபட்ட மாதிரியில் (In one form or other) தோன்றித் தான் ஆக வேண்டும். அவ்வித மாறுபாடுகள் எங்கு? எக்காலத்தில்? ஏற்பட்ட போதிலும் சீக்கிரமாகவோ அன்றி அனேக காலம் கழித்த பிறகோ அவைகளும் ஓர் நிலை விட்டு மற்றோர் நிலைக்கு மாறி மாறிக் கடைசியில் ஒரு ஸ்திர ஸ்திதியை அடைந்தே தீரவேண்டும். விஞ்ஞானிகள், உஷ்ணத்திற்கும், சக்திக்கும் உள்ள சம்பந்தத்தை ஆராய்ந்து தெளிந்துள்ள இரண்டு தத்துவங்களிலே, இரண்டாவது தத்துவத்தின் (Second law of thermo dynamics) பிரகாரம் நமது உலகமானது தற்போதிருக்கும் நிலைமையை விட இன்னும் கீழான நிலைமைக்கே அதி சீக்கிரமாகப் போய்க் கொண்டிருக்கின்றதென்பது உண்மையே. அதன் பிரகாரம் பார்க்கப் போனால் முடிவில் இவ்வுலகிலே ஒரு வித தோற்றமும் இல்லாமற் போகுமென்பது திண்ணம். ஆனால் இவ்வித உண்மைத் தத்துவத்தை, நாம் வேண்டுமானால் கடவுள் பெயருடன் பிணைத்து, பிரளய (Dooms—day) காலத்தில் கடவுள் ? சமஸ்த தோற்றங்களையும் தன்னுள் அடக்கிக்கொள்ளுகிறார் என்றும், பிறகு மற்றோர் யுகத்தில் தன்னிடத்தினின்றும் படைக்கின்றார் என்றும் கூறிவிடலாம். ஆனால் அவ்விதக் கொள்கை ஏதோ ஓர் நம்பிக்கையைப் பொருத்ததாக அதிவிடுகிறதே ஒழிய, விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனால் பன்னாட்கள் பாடுபட்டுக் கணித்துக் கண்டதோர் கருத்தென்பதாக ஆகின்றதில்லையென்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். வான, பூத, பௌதிக, ரஸாயனம் என்பனவாகிய

விஞ்ஞான சாஸ்திரங்களால் நாம் ஆராய்ந்து தெளிந்த உண்மைத் தத்துவம் என்னவெனில் (Theory of evolution involution) படிப்படியாக அநேக பேதா பேத தோற்றங்களில் உழன்று உழன்று, பெற்ற அநுபவம் என்ற உணர்ச்சியின் பயனாய் நாம் இப்போது இந்த மானிட மகோன்னத பதவியைப் பல துயரங்களையும் பொருட்படுத்தாது அநுபவித்து வருகின்றோம்; மறுபடியும் பற்பல தோற்றங்களினூடே படிப்படியாகப் பிரண்டுருண்டு, ஒரு தோற்றமுமில்லாத சூன்ய நிலைக்கே சேருகின்றோம் என்பதுவே. இவ்வித நிலைமையை அடைவதுதான் யாந்தரது படைப்பின் நோக்கம் என்பதாக மதம் கூற முற்படுமெனில், அது ஒரு பொருத்தமாகப் புலப்படாததோர் நோக்கம் என்பதாகத்தான் நான் கூறுவேன்;—ஏன்?—கண்ணால் காணும் புண்ணிற்குக் கைக்கண்ணாடியும் வேண்டுமா? நாம் நமது அறிவால் அறியும் விஷயத்தை வெளியிட ஓர் கடவுளும் நமக்கு வேண்டுமோ? எனவே,—அதில் எவ்வளவு பொருத்தமற்ற நோக்கம் இருக்கின்றதெனினும், அது எவ்வளவு ஆதாரமற்ற கொள்கையையுடையதாக இருப்பினும்—கடவுள் என்ற ஓர் பொருள் இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ள ஒருவித காரணமும் இல்லவே இல்லை யென்கின்றேன்.

இந்தத் தர்க்கரீதியான ஆராய்ச்சியில் பழைய வேத—புராண சம்பந்தமான வைதிக தர்க்க சம்பிரதாயங்களை நான் முழுதும் புறக்கணித்துவிட்டேன்—ஏன்?—மதவாதிகளே அவற்றை ஆதாரமற்ற ஆபாசக் கூற்றுகளெனக் கருதி எள்ளி நகையாடித் தள்ளிவிட முற்பட்டுவிட்டார் என்பதாலேயேயாம்.

ஆத்மாவும் அழியாமையும்.

ஒவ்வொருவருக்கும் ஆத்மா (Soul) உண்டு என்ற கொள்கையே, எல்லா மதங்களிலெல்லாம் கலந்திருக்கிறதென்று கிறிஸ்து மதம் பறைசாற்றுகின்றது. பலம் குன்றி, மனம் நிறைந்து, அறிவற்று, அரசியல் துறைகளில் ஒரு நிலையும் பற்றற்று ஒடுங்கிக்கிடந்தவர்களின் கொட்டிகளில் தனித்து வசிப்பதே பிரதானமாக நினைத்துவந்த சோம்பேறிக் கூட்டத்தைச் சேர்ந்த ஸ்டோயிக்ஸ் (Stoics) எனப்படுவோருடைய கொள்கையே போன்று, ஆத்மா என்பதாக தனித்தோர் பொருள் மனிதனுக்குள் அந்தர்யாமியாக (கண்களுக்குத் தட்டுப்படாததாக) இருக்கின்றது என்ற கொள்கையும், சமயாசிரியர்களால் கற்பிக்கப்பட்ட மௌட்டீகக் கூற்றேயாகும்.

தோன்றும்போதே ஒவ்வொரு மனிதனும் பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்பதாகவே இயற்கையாக நினைக்கின்றான். ஆனால் அவனுடைய தேகபலம் குன்றி, மனோசக்தி நைந்துபோம் காலத்தில் பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் (to do good) என்ற சுபாவ குணம் தடைபட்டு, ஒவ்வொருவரும் நல்லொழுக்கமுடையவராக இருக்க வேண்டும் (to be good) என்பதாக நினைக்க ஆரம்பிக்கின்றான். இது இயற்கையாக மக்களுடைய மானசீக உலகில் நிகழும் ஓர் (மாறுதல்) சம்பவமாகும்.

கிறிஸ்து மதம் ஏற்பட்ட காலத்திலே, இப்படியான மனப்பான்மைதான் மனிதர்களுடைய உள்ளத்தில் இயற்கையாக நிலைபெறுவதாயிற்று. ஏனெனில் அக்காலத்திலே அவர்களுக்குத் தேகபலமும் இல்லை, அறிவு விளக்கமும் கிடையாது. இருந்தபோதிலும் அவர்கள், புத்தியில் தன்னுடைய சொந்த

நன்மையையே—நாட்டுக்ஷேமத்தையே பிரதானமாக நினைக்கவேண்டியதாயிற்று. பிறருக்கு நன்மை செய்யவேண்டுமெனின் அதில் பல கஷ்டங்களிருக்கின்றன, அதற்குப் பல வசதிகளும் வேண்டியிருக்கின்றன. ஆனால் சுயநன்மையையடைய வேண்டுமெனின் அதற்குப் பிரமாத கஷ்டம் வேண்டுவதில்லை. அதனை அடைதற்கு வேண்டிய வசதிகளும் அதிகம் உண்டு. எனவே பரோபகார சிந்தனையை இயற்கையாக உடைய மனிதன், காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப சோம்பேறி வாழ்க்கையிலீடுபட்டு, மதிமயங்கி, சுயநன்மையே பிரதானமென நினைக்க ஆரம்பித்துவிட்டான். இதனால் தப்பும் ஆத்ம நன்மை வேறொன்றும், பொது நன்மை வேறொன்றும் இவற்றுள் ஆத்ம சுகமே பிரதானமென்றும், பிறர் சுகம் நிஷ்பிரயோஜனமென்றும்—பாகுபாடுகள் ஏற்படலாயின. ஆத்ம சுகம் எனப்படுவது சோம்பேறித்தனமாக இருந்து கஷ்டமன்னியில் நன்மை பெறுதலாக இருத்தலின் அதுவே மேலானதென்றும், பொதுநலம் எனப்படுவது சரீர உழைப்பாலே மற்றுடைய சக்திகளனைத்தையும் கவர்வதாக இருத்தலின் அது நிஷ்பிரயோஜனமென்றும்—"சீ! சீ! இந்தப்பழம் புளிக்கும்" என்ற முறையில் வெகு நளினமாக மனிதன் எண்ணிவிட்டான். ஆகவே ஹிந்து மதக் கட்டளைகளிலே பிறர் நன்மை, சாதுர்யம் முதலிய பரந்த நோக்கங்களுக்கு இடம் இல்லாமற்போனதற்கு மூல காரணம், ஆத்மாஉண்டு, அதற்காகத்தான் ஒவ்வொருவரும் பாடுபடவேண்டுமென்ற திட்டம்—(அதாவது அவனவன் கடைத்தேற அவனவன் பாடுபட்டாகவேண்டும் என்று) ஏற்பட்டிருத்தலேயாம்.

இக்காலத்திலே மதப்பற்றுள்ள ஹிந்துக்கள் எவ்வ பேலாகக் கருதுகிறார்கள்? விசாரம் பரோபாவமாம். தேச

யப்பித்தலாட்டம் உலக தர்மமாய். விபசாரம் என்பது தனிப் பட்ட வகையில் ஏற்படும் குற்றமாகும்; ஆனால் தேசியப்பித்த லாட்டம் என்பது, பல்லாயிரம் மக்களுடைய பொது நன்மைக்காக உழைக்க முன்வந்த ஒரு தேசியவாதி சுயநலத் தால் ஒரு சமூகத்தாரிடமிருந்து பரிதானம் (லஞ்சம்) வாங்கிக் கொண்டு மற்றொரு சமூகத்தினரை அடக்கியொடுக்கி இம்சிக்க வெகு சாதுர்யமாக ஏற்படுத்தலாகும். இவை இரண்டில் ஆத்மா என்னும் ஒரு பொருளை கலங்கச்செய்யும் விபசாரம் என்பது மகாபாவமாம். பலகோடி மக்களை மீளவொட்டாது தேசியப்பித்தலாட்டத்தால் நசுக்கும்படி அடக்கி வைத்திருப் பது,—வெளிப்படையான—அதாவது ஆத்மாவிற்கு வேறு பட்ட பொருளின் சம்பந்தமாக இருக்கலின்—அது பாவ மல்லவாம். இவை சமய சாதுர்யமெனும் உலகதர்மமாம்! என்னே! இவர்களது மூடக்கொள்கை. உண்மையில் அந்த விபசாரகனைவிட, இந்த தேசியவாதிதான், எத்தனையோ ஆயி ரம் மடங்கு அதிகமான பாவத்தைச் செய்கின்றான்.

மத்திய காலத்திலே (Medieval period) எது சிறந்த தர்மம் என்பதாகக் கொள்ளப்பட்டதென்பதை அக்காலத்திய சித்திரங்களிலிருந்தும், பதுமைகளிலிருந்தும் நன்றாக உணர லாம். மிக்க தாழ்மையும், தற்பெருமையும்கூடிய ஆசாபா சங்களே அவற்றிலிருந்து வெளியாகின்றன, உலகத்தைத் துறந்து சந்நியாசியாக வெளியேறினவனே (ஒரு வேலையும் செய்யாமல் ஊரார் உழைப்பில் உண்டுகளித்து இருப்பவனே) மஹா புருஷனும்—ஞானியுமாம்! உலக மக்களின் மேனோக்க த்தை உதாசீனம் செய்து, அவர்களுடைய நன்மையைப் புறக்கணித்து—அதாவது பரோபகாரச் சிந்தையை அறவே ஒழித்து—ஏதோ தன்னுள் இருக்கும் ஆத்மாவெனும் ஒரு

போலிப்பொருளின் நன்மைக்காக (தன்னுடைய சுயநலமோன் மைக்கரீக) சோம்பேறியாய் இயற்கைக்கு மாறுபட்டவகை யில் காடு, குகைகளிலே தன்னந்தனியனாய் விலங்கள்ள ஒளிந்து திரியும் அவன் எவ்வாறு மகான் ஆவானோ அறிகிலேன். இத்தகைய மகாஞானிகள் ஒருபுறமிருக்க, உலக விஷயங் களில் ஈடுபட்ட எத்தகைய மனிதரை மதம் பாராட்டி பரமபுருஷர் என்றுபட்டம் அளிக்கின்றதென்பதையும் ஆராய்வோம். அர்ச். லூயிஸ்(St. Louis) என்பவரை கிறிஸ்துமதம் போற்று கின்றது. அவர் என்ன செய்தார்? பொது நன்மைக்கு எதாவது பாடுபட்டாரா? இல்லை. ஆனால் என்ன செய்தார்? கிறிஸ்து மதத்தின் பேரால்—கிறிஸ்தவ மக்களின் பேரால், தங்கள் இனம் ஆதிக்கம் பெறவேண்டுமென்ற மௌட்டீக அகங்காரப்பித்தால் துருக்கியரை எதிர்த்துஇருதிறத்தாருக்கும் பெருத்த தீங்கையே விளைவித்தார். மற்றபடி ஜனங்களுக்குப் பொருளாதார சம்பந்தமான நன்மைகளைச்செய்வோரையும், கிரிமினல் சிவில் முதலிய சட்டங்களைச் சீர்திருத்தம் செய்து பொதுநன்மையைக்காப்பாற்ற முற்படுவோரையும் கிறிஸ்துமத திருச்சபைகள் (Churches) ஒருசிறிதும் பொருட்படுத்துவ தில்லை. இவற்றினின்றும் நாம்என்ன அறிகின்றோம்? மக்களது நன்மையை முன்னிட்டுச்செய்யப்படும் காரியங்கள் பிரயோஜனமற்றதென்பதே மத சம்பிரதாயமென்பது நன்கு விளங்குகின்றதல்லவா? தவிர, பஞ்சாங்கத்தை (Calender) புரட்டிப்பார்த்தால் அதில் குறிக்கப்பட்டுள்ள ஞானிகள் (Saints) எனக்கூறப்படுவோர் எவரை எடுத்துக்கொண்ட போதிலும், பொதுஜன ஊழியத்தை மேற்கொண்டு தொண்டாற்றியவர் ஒருவராவது அதில் இருப்பதாகத்தெரிகின்றதா? இல்லவே இல்லை.

இப்பாதிரி மக்களுடைய செயல்களிலே தனக்கு ஒன்று, பிறருக்கு மற்றொன்று என்பதாக மதத்திலே பிரிவினை ஏற்பட்டதன் காரணமாகத்தான், தனிப்பட்ட மனிதனிலும் அக்கொள்கை, தன் ஆத்மா ஒன்று, அதற்கு வேறான தேகம் மற்றொன்று என்பதாகப் படிப்படியே பிரிவு ஏற்பட்டு அவைகள் கிறிஸ்து மத வேத சம்பிரதாயங்களிலும் டெஸ்கார்டீஸ் (Descartes) என்ற ஞானியார் வகுத்த தர்மக் கட்டளைகளிலும் சாஸ்வதமாக வேரூன்றி நிலைநாட்டப்பெற்றது. இன்னும் நன்றாக விளக்கவேண்டுமானால் சுயநலமே ஆத்மா, பொதுநலமே தேகம்; தனிப்படையான மனிதனே ஆத்மா, பொதுத் தொகுதியான உலகமே தேகம், இதைத் தவிர ஆத்மா என்ற பொருளுக்கு வேறு அர்த்தமில்லை.

எனவே, கிறிஸ்துமத தர்மங்கள் மனிதனுடைய ஆத்மாவை மேன்மைப் படுத்தி தேகத்தைத் தாழ்மைப்படுத்துவதன் நோக்கம், ஆத்மாதான் ஒரு சுயநலக் களஞ்சியம் என்பதனாலேயே யாகும்.

எனவே, நான் மேற்கூறிய விஷயங்களிலிருந்து, கிறிஸ்து மதம் சென்ற இருபது நூற்றாண்டுகளாக மக்களைச் சுயநலப் பிரியர்களாக்கி இயற்கைக்கு மாறாகத் தங்களது ஆத்மாவிற்குள்ளேயே அடைபடுமாறு செய்து வந்திருக்கின்றதென்பது வெளிப்படை. மனிதனைச் சுயநலத்தினின்றும் பிரித்து வெளியிட்டுச்செல்லுவது 1. பெண்ணினமும், 2. மக்கள்மேல் காதலும், 3. சமூகப்பற்றும், 4. ஜனசமூகத்தொண்டுமேயாம். இந்நான்கையும் கிறிஸ்து மதம் தலையெடுக்காதபடி செய்திருக்கின்றது. முதலாவதான பெண்ணினத்தை மஹாகேவலமானதென்று அடக்கியொடுக்கத் தன்னாலான முயற்சிகளைத் தையும் கிறிஸ்து மதம் மேற்கொண்டிருக்கின்றதென்பதை

முன்னர் நன்றாக விளக்கியிருக்கின்றோம். தவிர, மக்கள்மேல் காதல் கொள்ளுதலே கிறிஸ்துவே—ஏன்?—அவருடைய பிரதம சிஷ்யகோடிகளனைவரும் வெறுத்து உதாசீனம் செய்தே வருகின்றனர். மேலும் கிறிஸ்து மதம் மேலோங்கியிருந்த காலத்திலே, ரோமாபுரியின் எதாதிபத்தியத்திற்குட்பட்ட தேசங்களில் சமூகப்பற்று எவ்வாறு முறியடிக்கப் பட்டதென்பதையும் நாம் நன்கறிவோம். நான்காவதான (ஜன சமூக) ஒற்றுமையைக் கிறிஸ்து மதக்கோட்பாடுகள் (Gospels) எவ்வாறு சிதைக்கச் செய்தன என்பதை இன்னும் அறிஞர் நன்கு ஆராய்ந்து தெளியாமலே இருக்கின்றனர். கிறிஸ்துமதத் திருச்சபைகள் (The Churches) ஏசுநாதருடைய தாயாராகிய மேரி அம்மையாரைப் பாராட்டுகின்றதெனினும், ஏசுநாதர் என்ன கூறுகிறார்? அவருடையவாக்கிலிருந்து மேரியை உயர்த்திப்பேசிய ஒரு சில வார்த்தைகளாவது காட்ட முடியுமா? 'பெண்ணே! உன்னால் எனக்கென்ன உபயோகம்' Woman! what have I to do with thee(St. John II, 4) என்பதாக ஏசு கிறிஸ்து தன் தாயைப் பார்த்துக் கூறுவதிலிருந்தி என்ன தெரிகின்றது? இன்னும், ஏசுகிறிஸ்து 'தகப்பனிடத்திலிருந்து மகனைப்பிரிக்கவும், தாயையும் மகனையும் வேறுபடுத்தவும், மருமகளுக்கும் மாமியாருக்கும் வேற்றுமை ஏற்படுத்தவுமே நான் அவதரித்திருக்கிறேன். அவரை (கடவுளை) த்தவிர எனைய தகப்பனையும் தாயையும் எவன் நேசிக்கின்றானோ அவன் அவரை (கடவுளை) அடைய மாட்டான்". (Mat X. 35to37.) என்பதாக பறைசாற்றுவதிலிருந்து என்ன தெரிகின்றது? இயற்கையாக ஏற்பட்டுள்ள குடும்பப் பற்றுதல், மதத்தின் பெயரால் அழிக்கப்படுகின்றதென்பது நன்கு விளங்குகின்றதன்றோ? இக்காலத்தில் மேனாடுகளிலே ஜன சமுதாய வாழ்க்கை முறையில் பல கஷ்டங்கள் ஏற்பட்டு சஞ்சலமே

எங்கு பார்த்தாலும் தண்ணீரி லோலாய் சஞ்சாரஞ் செய்வதற்குக் காரணம் கிறிஸ்து மதமே தவிர வேறு என்ன? தேசிய வாதிகளே! யோசித்துக் கூறுங்கள்.

இம்மாதிரியான ஆத்ம—அநாத்ம அவிவேகத்தால் ஏற்பட்ட சமயதத்துவத்தோடு, ஆத்மாவிற்கு அழியாமையெனும் சித்தாந்தத்தை சிருஷ்டி செய்து, அதற்கென ஒரு சுவர்க்க லோகமும், அதற்கு மாறுபட்ட கொள்கையை யுடையோருக்கு நரக லோகமும் சாயோசிதம்போல் மானச பூமியில் சிருஷ்டி செய்வதாயிற்று. இம்மாதிரியான நரகத்திற்கும் சுவர்க்கத்திற்கும் மாந்தரை அனுப்புவதற்கென ஏற்படுத்தப் பட்டுள்ள காரண காரியங்களை ஆராய்ந்தால் மிக்க விசித்திர மாகவே இருக்கின்றது. உதாரணமாக ஒருவன் எத்தனை கெட்ட காரியங்களைச் செய்தவனாக இருப்பினும், அவன் சாகும்போது ஒரு பாதிரி (புரோகிதர்) பக்கத்திலிருந்து தண்ணீர் வார்க்கும்போது ஏதாவது சில (சிவ சிவ போன்ற) மந்திர வாக்கியங்களை உச்சரித்தபடி இறந்தால் உடனே தேவ தூதர்கள் வந்து விடுவார்களாம், சுவர்க்க லோகத்தின் கதவு திறந்து கொடுக்குமாம், அவன் தேவ கணங்கள் புடை சூழ அளவிறந்த போகம் அனுபவிப்பானாம். ஆனால் ஒருவன் எத்தனையோ நற்காரியங்களைச் செய்தவனாக இருப்பினும், பாதிரி கைத் தண்ணீர் கிடைக்கப் பெறாமல் திடீரென அகால மரணத்திற்குட்பட்டு மந்திர வாக்கியங்களை உச்சரிக்க சமய மேற்படாதவகையில் இறந்தானாகில் அவனுக்கு நரகம்தான் பிராப்தியாம், அவன் யமதூதர்களால் இழுக்கப்பட்டு பல வேதனைகளுக்கும் ஆட்பட வேண்டியதாம்.

இத்தகைய அபிப்பிராய—ஆபாச மோசக் கொள்கைகளைத் தற்காலத்திய புராட்டெஸ்டாண்ட்டுக் கிறிஸ்தவர்களும், பை

பின் வேதத்தைப் புரட்டிப் பாராத நவீன தத்தோலிக் கிறிஸ்த வர்களும், ஆபோஸ்டலிக்க பாட்டார்களென்பது உண்மையே. ஆனால் கிறிஸ்துமத சம்பிரதாயப் பிரகாரம் இது வாஸ்தவமே. ஆனால், நாகரீக முன்னேற்றமடைந்துள்ள இந்நாளிலும்கூட பௌராணிகக் கொள்கைகளைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்து வாதிப்போரையும் நாம் காணலாம்.

கிறிஸ்து மதத்தின் பயனாகத் தோன்றிய ஆத்மாவைப் பற்றிய சித்தாந்தத்தாலும், அதற்கெனச் சிருஷ்டிக்கப் பட்ட சுவர்க்கலோக சித்தாந்தத்தாலும் கிறிஸ்தவ உலகில் காணப்ப டும் ஆபாசக் கூற்றுகள் எண்ணிறந்தன. மெக்ஸிகோ, பெரு (Mexico, Peru) என்ற இடங்களிலிருந்த ஸ்பெயின் தேசக் கிறிஸ்தவர்கள் (Spaniards) அங்குள்ள இந்தியக் குழந்தை யைப் பிடித்து தண்ணீர் தெளித்து (Baptism) உடனே அந்த இளைஞர்களைத் துப்பாக்கியால் சுட்டுச் சாகச் செய்து மகிழ் வார்களாம்! ஏன்?—

• அவ்வாறு ஞானஸ்நானம் கொடுத்து அவர்களைச் சாகச் செய்வதால், அக்குழந்தைகள் சுவர்க்க லோகத்திற்குபோகு மென்று அம்மூடக் கிறிஸ்தவர்கள் நினைத்தார்கள். என்ன கொடுமை! இம்மடமைக்குக் காரணம் எது? மதமேயன்றோ? மதப்பற்றுள்ள—மத வெறியில் மதி மயங்கியுள்ள—எவனும் அவர்களுடைய செயலைக் குற்றமெனக் கொள்ளவே மாட்டான். ஆனால் அறிவு விளக்கம் பெற்ற இக்காலத்தில் அவர்களது செயல் கண்டிக்கப்படுகின்றது. இதனால் என்ன விளங்குகின்றது? மாந்தர் தத்தம் ஆத்மா அழியாதது என்ப தாகக் கொண்ட மூடக்கொள்கையையே எண்ணிறந்த ஆபா சங்களுக்கு வித்தாக இருக்கின்றதென்பதும் தவிர, ஆத்மாவை

தேசத்தினின்று பிரித்த அவிவேகமே அநேக ஞான நூல்களில் ஆபாசத்தைக் குவித்து வைக்க இடமளித்திருக்கிறதென்பதும் நன்றாக விளங்குகின்றதன்றோ! அறிஞர் இவற்றை நன்கு ஆராய்ந்து இவ்வித மூடப் பழக்க வழக்கங்களை அறவே ஒழித்து, ஆபாச சித்தாந்தங்களைக் களையெடுக்காதபடி நிர்மூலமாக அழிப்பார்களாக.

மதத்துவேஷத்தின் வித்துக்கள்.

கிறிஸ்து மதம் தலையெடுத்த அன்றுதான் உலகிலே மதத் துவேஷம் என்பது உற்பவித்தது எனலாம். இதை சரித்திர ஆராய்ச்சியாளர் ஒவ்வொருவரும் நன்கு கவனிக்கவேண்டும். கிறிஸ்து மதத்தில் இவ்வித மதத்துவேஷபுத்தி தலைதூக்கத் தோன்ற மூலகாரணமாக இருந்தவை எவையெனில், ஞான மார்க்கம், கடவுள் வழிபாடு எனப்படும் யூதர்கள் (Jews) கொண்டிருந்த இந்த இரண்டும் மூடநம்பிக்கைதான். ஆதியில் யூதர்கள் இவ்வித துவேஷக் கொள்கையை ஏன் ஆதரித்துக் கைபிடித்தார்கள் என்பது எனக்கே இன்னும் நன்றாக விளங்கவில்லை. இந்த மதத்துவேஷ புத்தி அவர்களிடம் குடிகொண்டதற்குக் காரணம், அவர்களைப் பிறதேச மக்கள் நாற்புறமும் சூழ்ந்து அடக்கி ஒடுக்கி அடிமைகொள்ள முற்பட்டதாலேற்பட்ட சுபாவ துவேஷ குணம் என்பதாக யூகிக்கலாம். காரணம் யாதாயிருப்பினும் சரியே, யூதர்களும் முக்கியமாக தீர்க்கதரிசிகள் (Prophets) எனக்கருதப்பட்டவர்களும்தான், இப்போது காணப்படும் மிக்க பெண்டட்டூகமான ஞானமார்க்க விதிகள் எனப்படுவனவற்றையும், தங்கள் மதத்தைத் தவிர மற்ற மதங்களை அறவேயழிக்கவேண்டுமென்ற துவேஷ புத்தியையும் முதன் முதலில் புதிதாகக் கற்பனை செய்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. மேற்கூறிய

இந்த இரண்டு கொள்கைகளினால் மேநாடுகளிலே விளைந்த தீமைகளுக்கு அளவே இல்லையென்பது சரித்திரப்பிரசித்தம். கான்ஸ்டான்டைன் (Constantine) காலத்திற்கு முன்னர் ரோமாபுரியைப் பரிபாலித்துவந்த சக்ரவர்த்திகளால், ஏதோ கிறிஸ்தவர்கள் பலர் கொலை செய்யப்பட்ட விஷயத்தைப் பற்றி இப்போதுள்ள கிறீஸ்தவத் திருச்சபைகள் (Churches) பிரமாதப்படுத்தி வருகின்றன. ஆனால் அவ்விதக் கொலைகள் மிகச் சொற்பமானதும் பலஇடங்களிலே-பலகாலங்களிலே முக்கியமாக இராஜீய சம்மந்தமாகவே (Political) நடைபெற்றதெனலாம். அவ்விதக்கொலைகள் ஒருபுறம் அவ்வாறு நிற்கட்டும். ஆனால், கான்ஸ்டான்டைன் காலத்திற்குப்பிறகு கிறிஸ்தவர்களுக்குள்ளேயே ஒரு பிரிவினருக்கும், மற்றொரு பிரிவினருக்குமே நடந்த பல மிகக்கொடுரமான கொலைகளுக்கும் (Persecution) காரணம் ரோமாபுரி சக்ரவர்த்திகள் தானா? கிறிஸ்தவர்களுக்குள் கிறிஸ்தவர்களே செய்துகொண்ட இத்தகைய கொலைகளைப்போல் (Persecution) எந்த ரோமபுரிச் சக்ரவர்த்தியினாலும் நடைபெறவே இல்லை. யூதர்களிருந்த இடத்தைத் தவிர, மற்றப்படி உலகத்திலுள்ள எத்தேசத்திலும் இப்பாதிரியான கொலைகள் கிறிஸ்துமதம் தோன்றுவதற்கு முன் நடைபெற்றதே இல்லை. இதனால் மனிதனை மனிதன்வெறுப்பதோடு கொலை செய்யவும் தூண்டுவதற்கு ஒத்தாசையாக இருந்ததும், இருப்பனவும் ஆனவற்றுற்றுள் மதம் என்பதும் ஒன்று என்பது தெளிவாகின்றதல்லவா?

ஹெரோடாட்டஸ் (Herodotus) என்பாருடைய நூல்களைப் பார்ப்போமானால், அவர்சென்று நேரில் பார்த்தபோது மற்ற தேசத்தினர் அக்காலத்திலே எவ்வளவு பொறுமையுடனும் சாந்தமாகவும் நடந்துவந்தனர் என்பது விளங்கும்.

ஆனால் அவர்கள் காட்டிய காட்டுமிராண்டித்தனமான சில பழக்க வழக்கங்கள் அவரைத் திடுக்கிடச் செய்திருப்பினும் அவர் (ஹெரொடோட்டஸ்) பிற கடவுளர்களிடத்திலும், பிற நாட்டாருடைய ஒழுக்க வழக்கங்களிடத்திலும், எத்தகைய பாரபக்ஷமில்லாத மனப்பான்மையையுடையவராக இருந்தா ரென்பது நன்கு விளங்கும்.

யேசுநாதரை (Jesus) வேறெந்தக்கூட்டத்தார் இன்னொரு பெயரால் அழைப்பாரெனின், அவர்கள் என்றென்றும் மீளாத பாழ் நரகில் விழுவார்கள் என்ற கொள்கையை அவர்கள் நிரூபிக்க எந்த இடத்திலும் பிரயாசப்படவுமில்லை, அதற்காக அவர்களை உடனே கொன்று அவ்வித நரகதுன்பத்தை எவ்வளவு சீக்கிரம் அனுபவிக்கச்செய்யவேண்டுமோ, அதற்கான காரியங்கள் அனைத்தும் செய்யவேண்டுமென அவர் கூறத்துணியவுமில்லை. ஆனால் இவ்வித மனப்பான்மைக்கு முற்றும் முரணானவையாக இருந்தவர்கள் யார்? கிறிஸ்தவர்களே என்போம்.

அப்படியானால் தற்கால கிறிஸ்தவர்கள் மிக்க பொறுமையுடனே இருக்கின்றார்களே என்பீர்கள், அவர்கள் சிறந்த தன்மையுடையவர்களாக இருப்பது உண்மையாக இருப்பினும் அவ்வித சாந்தத்தனம் அவர்களிடத்திலே மிளிரக்காரணம் கிறிஸ்துமதம் அல்லவே அல்ல—ஏன்? பேரூட்டுக்கிளர்ச்சி கால முதல் (Renaissance) இந்நாள்வரை சுயஅறிவாளி (Free thinkers) களுடைய தொகை அதிகரித்து மேலோங்கி வருவதனாலும், அவர்கள் காட்டிய அறிவு விளக்கத்தால் கிறிஸ்தவர்கள் தங்கள் இழிதனத்தையும் மூடப்பழக்க வழக்கங்களையும் உணர்ந்தவர்களாகி வெட்கமுற்றதனாலும் சீர்திருத்தத்திற்காக எத்தனையோ கிளர்ச்சிகள் செய்து வந்ததன் பயனே

யாம். விஷயம் இவ்வாறிருக்க, இப்போது கிறிஸ்தவர்கள் நம் முன்வந்து நாங்கள் எவ்வளவு தயைதாக்ஷிண்யமும், அன்பும் பொறுமையும் உடையவர்களாக இருக்கிறோம் பாருங்கள்— என்று கூறுவது மிக்க விந்தையாகவே இருக்கிறது. அவர்களுடைய சாந்தத்திற்கும் அறிவு விளக்கத்திற்கும் காரணமாக இருந்தவர்கள், ஆதியில் அவர்களால் (கிறிஸ்தவர்களால்) கொலை செய்யப்பட்ட கூட்டத்தைச்சேர்ந்த பிற மதஸ்தர்களின் உபதேச மொழிகளே என்பதை இவர்கள் உணர்கின்றார்களில்லை.

மதத்திலே மூடநம்பிக்கை.

கி. மு. 4004-வது வருஷத்தில் தான் இந்த உலகம் சிருஷ்டிக்கப்பட்டதென்பதாகக் கிறிஸ்துமதம் பறைசாற்றுகின்றது. இப்போது அதைநம்புகின்றவர் யார்? ஒருவருமில்லை. ஆனால் கிறிஸ்துமதம் ஏகாதிபத்யம் செலுத்திவந்த அந்நாளிலே எவனாவது ஒருவன் அதற்கு மாறாக எண்ணத் தலைப்படுவானெனின் அவனது தலை அப்போதே எடுபடும் என்பதில் சந்தேகமே இல்லை. உண்மையை விளக்க ஓர் சிறிய அநுபவார்த்தமான உதாரணத்தை எடுத்துரைக்கின்றேன். என்னுடைய பாட்டனுக்குப் பாட்டனாகிய (Great Great Grand-father) ஒருவர், எட்னு (Etna) எனும் எரிமலையினின்றும் எரிந்தெழுந்த உலோகங்களைப் பரிசீலனை செய்து மதப்பித்தர்கள் கூறுவதுபோல் உலகம் கி. மு. 4004-ம் வருஷத்தில் சிருஷ்டிக்கப்படவில்லை; இன்னும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியிருத்தல் வேண்டும் என்ற முடிவுகண்டு, அதனை ஒரு சிறிய நூல் வாயிலாக வெளியிட்டார். இந்தக் குற்றத்திற்காக உடனே அவர் தன் ஊரை விட்டு தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டார். அவர் சர்வ சாதா

னை மனிதராக மட்டும் இருந்திருப்பின், அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனை அம்மட்டோடு நின்றிராது, (அதாவது அவரது தலை தப்பியிராது) என்பதில் சந்தேகமே இல்லை. என்னே! கொடுமை!!

மதத்திலேயே கிளர்ச்சிகள்.

ஆனால் சுமார் 150 வருடங்களுக்குமுன் நம்பிவந்த விஷயங்களை இப்பொழுது மதப்பற்றுடையோர்கள், நம்புகின்றார்களா? இல்லையே யெனலாம். அவ்வாறு அவர்கள் இப்போது அறிவுவிளக்கம் பெற்று இருப்பின் அது மதத்தின் பயனாவது எங்ஙனம்! கிறிஸ்து மதத்திலுள்ள ஆபாசக் கொள்கைகள் ஒவ்வொன்றும் மிகப்பலமான எதிர்ப்புகளாலும், கிளர்ச்சிகளாலுமே புரட்சி செய்யப்பட்டு இந்நிலைமைக்குக் கொண்டு வரப்பட்டதே யொழிய வேறு விதங்களாலன்று. அவ்வித சீர்திருத்தங்கள் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மதப்பித்தர்கள் முட்டுக்கட்டையாக இருந்து முறண்பட்டே வந்திருக்கின்றனர். கொஞ்சம் கொஞ்சமாகவே சுயசிந்தனையாளர்கள், (Free thinkers) மதப் பாதுகாப்பாளர்களை முறியடித்து வெற்றி பெற்றனர். ஆகலின் மனிதர்க்கு மனிதர் துவேஷ புத்தியுடையவர்களாகச் செய்து வருவது மதமே என்பதும்; மதக்கிளர்ச்சியென்பதும், மதம் தோன்றியது முதற்கொண்டே இருந்து வந்திருக்கின்றதென்பதும்; மதம் அழிந்தாலொழிய சமூக ஒற்றுமை யோங்கி மதக்கிளர்ச்சிகள் தாழும் என்பது இயலாதென்பதும் நன்கு விளங்குகின்றதன்றோ? மேலும் மதம் என்றென்று இருக்கும் வரையில் அதற்குச் சார்பாகச்சிலரும், எதிராகச் சிலரும் எக்காலத்தும் இருந்தே வருவார்கள். ஆகலின் இப்போது மதம் எந்நிலைமையிலிருக்கின்றதென்பதிலிருந்து, மதக்கிளர்ச்

பியின் பயனை அறிவுள்ளோர் நன்குணர்ந்து தெளிவதோடு, மதாந்திவேஷத்தை விடுத்து, அத்தகைய துவேஷ புத்திக்கு ஆதாரமாக இருந்த—இருக்கின்ற மதங்களையே அறவே ஒழிக்க கிளர்ச்சி செய்வோமாக.

சுயேச்சை அறிவின் சித்தாந்தம்.

இயற்கைச்சட்டம் (Natural law) எது?

இயற்கைச்சட்டம் எது? என்ற விஷயத்தைப்பற்றிய முடிவுகள் கிறிஸ்து மதஸ்தர்களிடத்திலே, இன்னும் சந்தேக பாவனையிலேயே ஊசலாடிக்கொண்டிருக்கின்றன—என்பது மிக விசித்திரமாகவே இருக்கின்றது. தற்காலத்தில் கிறிஸ்த வர்களிலே ஒரு சாரார் சுயேச்சா அறிவை (Doctrine of Free will) ப்பற்றிய சித்தாந்தத்தை முற்றிலும் ஆதரிக்கின் றார்கள். இந்தச் சித்தாந்தத்தின் சாராம்சம் என்னவெனின், மனிதப்பிரயத்தனங்கள் யாவும் இயற்கைச்சட்டங்களுக்கு மாறுபட்டு அதன் ஆதிக்கத்திற்கு அடங்காமல் நடை பெறுகின்றன—என்பதுதான். ஆனால், முக்கியமாக 18–19ம் நூற்றாண்டுகளிலே, ஒருசாரார் இயற்கைச்சட்டங்களிலே பூரணநம்பிக்கையுடையவர்களாக இருந்தார்கள்; அதாவது: இவ்வுலகத்தில் நடைபெறும் சகல காரியங்களும், ஒரு சர்வ வல்லமையுள்ள சர்வேஸ்பரனின் (Law giver) கட்டளைப் பிரகாரம் நடைபெறுகின்றன என்பதும்; அவ்வித இயற்கைச் சட்டங்கள் உலகத்தில் காணப்படுதலே கடவுள் ஒருவர் உண்டு என்பதற்குப்போதிய சான்றாகும் என்பதேயாம். ஆனால் தற்காலத்திலே விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக, மனிதர் தங்களுடைய பகுத்தறிவின் ஆதிக்கத்தையே மென் மேலும் நம்புகின்றார்களேயொழிய, சகல காரணகாரியங்களுக்

ரும் ஆதிமுதல்வனொருவன் எங்கேயோ இருக்கின்றானென்றும், அவனது கட்டளைகளின் பயனாலேயே சகலமும் நடைபெற்று வருகின்றன என்பதுமான ஓர்கொள்கையை நம்புவதற்குப் பின்வாங்குகின்றார்கள். ஏன்?—ஜடதத்துவ ஆராய்ச்சியாளர்கள்—பஞ்சேந்திரியங்களால் உணரப்படும் வஸ்துக்களையே நம்புகின்றவர்கள்—(Materialists) இப்போது விஞ்ஞான ரீதியாக (Laws of Physics) என்ன கூறுகின்றார்களெனின், நாம் கை கால் முதலிய அங்கங்களை நீட்டுவதும் சுருக்குவதுமான காரியங்கள் யாவும், இயற்கையாகத்தானுகவே சரீர அமைப்புப்படியே (Mechanically) நடைபெறுகின்றன என்பதாகவும்; எனவே அதற்கென சுயேச்சா அறிவு (Free will) என்பதாக ஒன்று இருந்து இவற்றை நடத்துகின்றதில்லை. என்பதாகவும் கூறுகின்றார்கள். இவர்கள் (Materialists) கூறுவதுபோல யாவும் இயற்கைப்பிரகாரம் நடைபெறுவதாக இருப்பின், மனிதர்களிலே சிலர் தத்தம் அறிவாற்றலின் பயனால் கண்டுபிடிக்கும் நூதன விஷயங்களுக்கு ஆதாரம் தான் என்ன? ஒரு பெரிய கவிவாணர் சிறந்த நூலொன்றை இயற்றுவதற்கும், ஒரு பரமமுட்டாள் மற்றொருவனைக் கொலை செய்வதற்கும் மூலாதாரமாக இருப்பது இயற்கையாயின், இவ்விருவருள் முன்னவரின் சிலைக்குப் பூஜை செய்து போற்றுவதும், பின்னவனைக் கழுவிலேற்றிக் கொலை செய்வதும் மடைமையேயாகுமன்றோ!

சுயேச்சா அறிவு எது?

தத்துவார்த்தமான ஒரு சில சித்தாந்தங்களிலே, (In Certain Metaphysical systems), மனோதத்துவ உலகிற்கு அப்பாற்பட்ட நிலையில், சர்வாதிகாரமுடையது என்பதாகக் குறிக்கப்பட்டிருப்பது வாஸ்தவமே; ஆனால் அவ்வித மனதிற்

கெட்டாத நிலையிலுள்ள சர்வாதிக்கமுள்ள அறிவு நமது தேகத்தை இயக்கவேண்டுமானால், அது அந்த நிலையிலிருந்து (அறிவுலகத்திலிருந்து), இந்தக் கீழ்தரமான பௌதிக உலகிற்குச் சம்மந்தமேற்படுத்திக்கொண்டு தொழில்களை நடத்துதல் என்பது முடியாது; எனவே அத்தகைய சுயேச்சா அறிவினால் சமூகமுன்னேற்றத்திற்கு ஒருசிறிதும் பயன்படாதென்பது திண்ணம்.

இவற்றால் நாம் இயற்கை நியதி (Natural law) இன்னதென்பதைப்பற்றியும் சுயேச்சா அறிவு (Free will) இன்னதென்பதைப்பற்றியும் விசாரித்துணர்ந்தோம். இனி வஸ்துவின் பரிணாமநியதி (உள்ளது சிறத்தல்) (Theory of Evolution) என்பதைப்பற்றி விசாரிப்போம். இந்த தத்துவத்தை ஒப்புக்கொண்ட கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவருடைய மனதிலும் இது, பிரபல கிளர்ச்சியை உண்டாக்கியிருக்கின்றது. முற்கூறிய அறிவின் சர்வாதிகாரத்தைப்பற்றிய சித்தாந்தத்தை (Doctrine of Free will) நம்புகின்றவர்கள் அவ்வித அறிவின் தத்துவம் மனித ஜன்மத்திற்கு மட்டுமே இருப்பதாகப் பறைசாற்றுகின்றனர். ஆனால் பரிணாம சித்தாந்திகள் (Evolutionists) அறிவெனும் மனோதத்துவ உணர்ச்சி, மாந்தர்க்கேயன்றி ஏனைய பல கிருமிகீட ஜடத்வ வஸ்துக்கள் சகலத்திற்குமே பொதுப்படையானதென்பதை உணர்த்துகின்றார்கள். எனவே, சுயேச்சா அறிவை ஆதரிக்கும் கிறிஸ்தவர்கள், மனிதனுடைய சுயேச்சா அறிவிற்கு மட்டும் ஆதிக்கம் கொடுப்பதற்காக, ஜீவப்பிராணிகளிடமிருக்கும் அணுக்களின் சலன பேதங்கள் (Behaviour of living matter) பௌதிக ரஸாயன சாஸ்திரங்களில் (Physics and Chemistry) கூறப்பட்டுள்ள ஒழுங்குமுறைச்சட்டங்களுக்கு

(laws), கட்டுப்பட்டதல்ல என்பதாகக்கூறுகின்றனர். ஆகவின் டெஸ்கார்டிஸ் (Descartes) என்னும் விஞ்ஞானி கூறுவதுபோல், மனித இனத்திற்கு விலக்கான ஏனைய சிருஷ்டிப்பிராணிகள் யாவும் தத்தம் இச்சா புத்தியை (சுயஅறிவை) அனுசரித்து நடக்காத யந்திரங்கள்—எனக்கொள்ளும் சித்தாந்தத்தை பாரமார்த்திகர்கள் (Teologians) ஒப்புக்கொள்ள மறுக்கின்றார்கள். மேற்கூறியபடி கல், புல், பூண்டு, கிருமி, கீடம், பக்ஷி, மிருகம், மனிதர்கள்—எனப்படும் சகல வஸ்துக்களுக்கும் பரஸ்பர ஒற்றுமையும் பற்றுதலுமிருப்பதாக (Doctrine of Continuity) அவர்கள் நம்புவதோடு நில்லாமல், இவைகள் உயிர்துறக்கும்போது இவைகளால் விழுக்கப்படும் ஜடவஸ்துக்களுக்கும், பிரிந்தேகிய உயிருக்கும் சம்பந்தம் இருக்கவேண்டும் என்பதாகவும் நினைக்கமுற்பட்டு, அவ்விதமான உயிரற்ற பொருள்கள்கூட இயற்கை நியதிக்கிணங்கி நடவாதெனக்கூறுகின்றனர். ஆனால் இவ்வாறு துணிந்து கூற முன்வரும் அவர்கள், இவ்வித சித்தாந்தத்தால் வேதங்களிலே கூறப்படும் அபூர்வ சம்பவங்கள் (Miracles) எனப்படுவனவற்றை மறுக்கின்றவர் ஆகின்றோம் என்பதை மறந்துவிட்டனர்போலும்! ஏனெனின் இயற்கை நியதி எனப்படும் ஒழுங்குமுறைகள் (Natural laws) இல்லையேல், அவ்விதஇயற்கை நியதிகளுக்கு மாறான முறையில் கடவுள்தோன்றி, தனது அபாரசக்திகளால் அபூர்வ அதிசயத்திருவிளையாடல்களை நிகழ்த்துதல் என்பது எவ்வாறு இயலும்? எனவே மேற்கூறிய வஸ்துவின்பரிணாமசித்தாந்தத்தை ஒப்புக்கொள்ளும் தற்கால நாகரிக வேதவைதிகர்கள் (Theologians) முன்போல ஏதோ அபூர்வ சம்பவங்களைக் கடவுளே தோன்றி செய்ததாக நினைக்காமல், தற்காலத்தில் எல்லாவிடங்களிலும் நடைபெறும்

தன காரியங்கள் ஒவ்வொன்றும் (படைப்புகள் யாவும்) அபூர்வ சம்பவங்களே (Miraculous) என்பதாக மிகக் கன்னியமாகப் பேசும் நிலைமைக்கு வந்ததில் யாதொரு அதிசயமுமில்லை.

மதமும் விஞ்ஞானமும்.

மேற்கூறிய பல விஞ்ஞான சித்தாந்தங்களால் மத உலகிலே ஏற்பட்ட கிளர்ச்சிகளெனும் அலைகளால் மோதுண்டு பரிதவிக்கும் வேதவைதீகர்களெனும் படகோட்டிகளுக்கு, இப்போது அணுக்களைப்பற்றி வெளிவந்த விஞ்ஞான சாஸ்திரம் (theory of atoms and electrons) ஒரு தங்குமிடம் போல் காணப்படுகின்றது. அணுக்களைப் பற்றிய நவீன சித்தாந்தம் என்னவெனின், பொதுவில் வஸ்துக்கள் (அணுக் கூட்டங்கள்) சில, பௌதிக ரஸாயன சட்டங்களுக்கு (Physical aud Chemical Laws) அடங்கி நடப்பதாக இருப்பினும், ஒரு தனி அணுவைப் பொருத்த மட்டிலும் அது ஒரு விதி நிட்டத்திற்கும் அடங்காமல் சுயேச்சையாகவே சுழல்கின்றது என்பதாம். இதனை ஆதாரமாகக் கொண்டு, நமது நவீன நாகரீக வைதீகப்புலிகள், என்ன கூறுகின்றார்களெனின் இதுவே இயற்கை நியதி (natural law) என்பதாக ஒன்று இருப்பதற்குப் போதிய சான்றாகும் என்கின்றனர். ஆனால் நான் கூறுவது என்னவெனின், இப்போது இவர்கள் கூறும் இயற்கை நியதி (அணுக்களின் சுயேச்சை) யுங் கூட, விஞ்ஞான ஆராய்ச்சி மேலோங்கும்போது சாதாரண நியதி (laws) களுக்குள்ளடங்கிவிடும் என்பதுதான்; ஆனால் அத்தகைய புதிய நியதிகளுக்கும், தற்காலத்திய பழைய நியதிகளுக்கும் பல வேற்றுமைகள் ஏற்படுதல் இன்றியமையாததேயாகும். எது எவ்வாறிருப்பினும், அணுக்களின் சையோ

கத்தைப் பற்றிய நவீன சித்தாந்தங்களால், நமது வாழ்க்கைக்கு யாதொரு நன்மையும் விளையப்போவதில்லையென்பது மட்டும் நிச்சயம். வெளியில் பஹிரங்கமாகக் காணப்படும் அசைவுகள் (Visible Motions) மட்டுமே நமது வாழ்க்கை முறைக்கு நன்மை பயக்கும்; அவ்வித அசைவுகள் அனைத்தும் நமது தற்கால நியதி (laws) களுக்கு ஒத்தே நடைபெறுகின்றன. உதாரணமாக, (நமது பழைய உதாரணத்தையே எடுத்துக்கொண்டு பார்க்கும்போது), ஒருவன் ஒரு அழகிய கவி எழுதுவதற்கு, அதிகமான இங்கியையோ அல்லது பென்சில் ஈயத்தையோ (Ink or lead) அசையச் செய்தாக வேண்டியிருக்கின்றது. எனவே அந்த எழுத்துக்கள் ஒரு நர்த்தன அரங்காக (Ball-room) எடுத்துக்கொண்டோமானால், அந்த எழுத்துக்களில் அடங்கியிருக்கும் ஒவ்வொரு அணுவும் ஒரு நடிப்போன் (Dancer) ஆகின்றது. இந்த அணுவுக்குள்ளிருக்கும் பரமாணு (Electron), அந்த அணுவிற்குள் எப்படியோ சுயேச்சையாகவே அசைந்தாடிக்கொண்டிருப்பதாக இருப்பினும், அந்த அணுவாகிய நடிப்போன் ஆடும் நாடக அறையாகிய எழுத்துக்கள், நமது சாதாரண பௌதிக நியதிகளுக்கு (Physical laws) அடங்கியே அசைவதால், இந்த இரண்டாம் அசைவாகிய எழுத்துக்களின் நியதியே கவிஞனுக்கும், அந்தக் கவியை வெளியிடும் அச்சிடுவோனுக்கும் அத்தியாவசியமாக இருக்கின்றதேயொழிய, முன்னைய அணுவிற்குள்ளணு நடிக்கும் நியதியால் இவர்களுக்கு யாதொரு பிரயோஜனமும் இல்லை. ஆகவே தற்கால நாகரிக வைதிகப் போலிகள் கூறுமாப் போல், நவீன விஞ்ஞான சித்தாந்தங்களால் மனித சமூகத்திற்கு யாதொரு பெருத்த நன்மையும் நேரிடப்போவதில்லை. ஏன்?—நமக்கு வேண்டியது வெளிவஸ்துக்களும் அவற்றின் சட்டங்களுமே

யாகும்; பற்றப்படி அந்தரங்கமான (மனதிற்கும் கண்ணிற்கும் புலப்படாத) வஸ்துக்களாலும், அவற்றின் சித்தாந்தங்களாலும் நமக்கு யாது பிரயோசனம் இருக்கின்றது பாருங்கள்!

சுயேச்சா அறிவினால் ஏற்படும் பயன் என்ன?

எனவே, சுயேச்சா அறிவென்பதாக (Free-Will) ஒன்று இருப்பினும், அது நமக்கு யாதொரு பயனையும் அளிக்கப்போவதில்லை. அதனைப் பற்றிய சித்தாந்தமும் இதுவரையில் புத்திக்குப் புலப்படுமாறு வெளியாக்கப்படவுமில்லை. மனோதத்துவ ஆராய்ச்சியில் அது தோன்றுவதாகவே இருப்பினும், தற்காலத்தில் ஒருவரும் உலக நடையில் அதனை அங்கீகரித்து உபயோகப் படுத்துவதைக் காணவே காணோம். ஒவ்வொருவரும் தங்களுடைய இயற்கைக் குணங்களை நல்ல வழியில் பழக்கி நன்மையடைய முடியும் என்பதை உணர்ந்தே இருக்கின்றார்கள். உதாரணமாக சாராயம் குடிப்பதாலும், அபின் சாப்பிடுவதாலும் ...ம் நடத்தை சீர்குலையுமென்பதையும் ஒவ்வொருவரும் உணர்ந்தே இருக்கின்றார்கள். சுயேச்சா அறிவை ஆதரிப்போர் (apostles of Free will) ஒருவன் தனது சித்த சக்தியால் (will power) மதுபானத்தினின்றும் தன்னை விலக்கிக்கொள்ளலாம் என்கின்றார்கள்; ஆனால் ஒருவன் சாராயத்தைக்குடித்திருக்கும்போது அவன் "பிரிட்டிஷ் அரசாங்கம்" என்ற சொல்லை, குடிக்காதவன் சொல்லுகிறமாதிரியே சொல்லுவானா—சொல்ல முடியுமா? முடியாதா? என்பதற்கு அவர்கள் யாதொரு பதிலும் கூறுவதில்லை. குழந்தைகளைப் பராமரித்துவரும் ஒவ்வொருவருக்கும், குழந்தைகளின் நற்குணம் அவர்கள் உட்கொள்ளும் ஆகாரத்தைச் சார்ந்ததாகவே இருக்கின்றது என்பதும்

நற்குணத்தைப்பற்றி நீண்டதோர் பிரசங்கம் குழந்தைகளுக்குச்செய்வதைவிட, அவர்களுக்கு நல்ல ஆகாரம் கொடுப்பதால் மேலான நன்மை பயக்கின்றது—என்பதையும் யாரும் அறிவார்கள். ஆனால், சுயேச்சா அறிவைப்பற்றிய சித்தாந்தத்தால், மனிதர் மேற்கூறிய உண்மைகளை ஆராய்ந்து தெளியாமல், அவற்றை, புறக்கணிக்கும் மனப்பான்மையையுடையவர்களாக ஆகிவிட்டனர். ஏன்!—ஒரு மனிதன் ஏதோ ஒரு குற்றம் செய்வதாக வைத்துக்கொள்வோம். உடனேதாம் அவனைக் குற்றவாளி என்று கூறத்தான் முன்வருகின்றோமே ஒழிய, அவன் அவ்விதக் குற்றம் செய்வதற்கு மூலகாரணமாக இருந்தவை யாதென நினைக்க முற்படுகின்றோமில்லை. அவனது குற்றத்திற்கு மூலகாரணம் அநேக வருஷங்களுக்கு முன்னால்—அதாவது அவன் பிறப்பதற்கு முன்னால் நேர்ந்த சம்பவமாக இருந்து, அந்தக்காரணத்திற்கும் இவனது செயலுக்கும் யாதொரு சம்பந்தமும் இருப்பதாக நமது புத்திக்கே எட்டாதமுறையில் அந்தக்காரியம் நேர்ந்திருத்தல் கூடுமன்றோ!

மதத்தினால் ஏற்பட்ட மடமை.

தற்காலத்தில் ஒருவன் தன்போன்ற மனிதனை நடத்துவதுபோல், அவன் கேவலம் தனது மோட்டார்காரைக்கூட நடத்துவதில்லை. அவனுடைய மோட்டார் ஓடாமல் நின்றுவிட்டால் சி! இது என்ன பாவம் (Sin) செய்ததோ, இப்படி நேர்ந்தது" என்பதாக அவன் கூறுகின்றான் இல்லை. "நீயொரு கெட்ட (wicked) மோட்டார், நீ ஓடாத வரையில் நான் உனக்கு பெட்ரோல் முதலிய எதுவும் கொடுக்கவே மாட்டேன்" என்று கூறுவதில்லை. ஆனால் என்ன செய்கின்றான். எந்த தவறுதல் நேர்ந்தது, அது நிற்பதற்குக்காரணம்

என்ன? என்பதாக விசாரித்துணர்ந்து, உடனே அந்தத் தவறுதலை அப்புறப்படுத்தி செம்மைப்படுத்த முற்படுகின்றான். அம்மாதிரி ஒரு மனிதனை மற்றொருவன் நடத்தவேண்டு மெனக்கூறுவோமானால், அது மேலான தெய்வீக மதத்திற்கே விரோதம் (அபராதம்) செய்வதாகிவிடுகின்றது. சிறு குழந்தைகளை நடத்தும் முறையிலும் இதே விஷயந்தான் காணப்படுகின்றது. அநேக குழந்தைகளிடம் தோன்றும் கெட்ட நடத்தைகள், அவர்களை அதற்கொத் தண்டிப்பதனாலே அவர்களிடம் வேரூன்றிவிடுகின்றன; மற்றப்படி அவற்றைக்கவனியாமல் விடப்படின் அது நாளடைவில் தானாகவே (அறிவு விளக்கத்தால்) மறைந்துவிடும். அனால் குழந்தைகளைப் பாமரிக்கும் தாதிகள் சிறு சிறு குற்றங்களுக்காக அவர்களைத் தண்டிப்பதால் நாளடைவில் அக்குழந்தைகளுக்குப் பைத்தியமும் பிடித்துவிடுகின்றது. (இம்மாதிரி நியூயார்க் (New York) பட்டணத்தில் ஓர் சம்பவம் நேர்ந்திருக்கின்றது.) குழந்தைகளைப் பாமரிக்கும் விஷயமாக இப்போது கையாளப்படும் முறைகளெல்லாம், பைத்திய ஆஸ்பத்திரியிலே, சித்தப்பிரமை கொண்டதும் நல்ல சத்தியற்றதுமான குழந்தைகளை—அதாவது எந்தக் குழந்தைகளுக்கு சுயேச்சா அறிவு குன்றியிருப்பதாகவும், எக்குழந்தைகள் தாங்கள் செய்யும் காரியங்களுக்கு காரணமான புத்தியை யற்றிருக்கின்றதென கருதப்படுகின்றதோ, அவ்விதக் குழந்தைகளை—பாமரிக்கும்போது வெளியான உண்மைகளேயாகும். இந்நாள் பரியந்தம், ஒருபையன் நன்றாகப்படிக்காவிடின், அவனைத்தடிகொண்டு அடித்துமிரட்டலே அவனை நன்றாகப்படிக்கவைக்கும் முறை என்பதாகக்கருதப்பட்டு வந்தது. ஆனால் தற்கால ஆராய்ச்சி அனுபவங்களின் பயனால், அந்தமுறை குழந்தைகளைப் பொருத்தமட்டிலும் நிருந்

தப்பட்டுவிட்டது; எனினும் பெரிய மனிதர்களை அவர்களது குற்றத்திற்காகத் தண்டிக்கும் சட்டம் (Criminal law) இன்னும் எங்கும் இருந்தே வருகின்றன.

ஒருவன் குற்றமான கெட்ட காரியங்களைச் செய்வதே தனது வேலையாகக் கருதுவானேயானால், அவனை அவ்வாறு செய்யாதிருக்கும்படி செய்விக்கவேண்டுவது அத்யாவசியமே யாகும். அதுபோலவே ஹைட்ரோ போபியா (Hydro phobia) எனும் (பித்துப்பிடித்த நாய் கடித்ததினால் உண்டாகும்) ஒருவித ரோகமுடைய ஒருவன், மனிதர்களையெல்லாம் கடிக்க ஆரம்பிப்பானேயாகில்—அம்மனிதன் தான் செய்யும் காரியங்களுக்கு மனப்பூர்வமாகப் பாத்தியப்படாதவனே யெனினும்—அவனையும் அவ்வாறு செய்யாதிருக்கும்படி செய்விக்க வேண்டுவது அதிக அவசியமேயாகும். பிளேக் எனும் தொத்து நோயினால் பிடிக்கப்பட்டிருக்கிற மனிதன் தன் மனமாரப்பிறருக்குக் கெடுதல்செய்யாதவனே (Morally not guilty & not wicked) யான போதிலும், அவனையும் ஒரு தனி அறையிலிட்டுப் பூட்டிவைக்கவேண்டியது அவசியமே. அம்மாதிரிதான், மோசடியாகப் பொய்க்கையெழுத்திட்டுப் பத்திரங்களை நஜூப்படுத்தும் தொழிலையுடைய ஒருவனையும் கருதித் தடுக்கவேண்டியது அவசியமாக ஏற்படுகின்றது; ஆனால் இவனைத் தடுக்கும் விஷயத்தில்மட்டும் "குற்றம்" என்பது எவ்வாறு ஏற்பட்டுவிடும்! இவனையும் மேற்கூறிய மற்றவர்களைப்போன்றே கருதித்தான் ஆகவேண்டும். இவன் குற்றவாளியெனின், பைத்தியக்காரனும், பிளேக் நோய் கொண்டவனும் குற்றவாளியே யென்பதில் சந்தேகம் என்ன? இதுதான் பகுத்தறிவிற்கும், அநுபவ சித்தாந்தத்திற்கும் ஒத்த முறையாகும். ஆனால் இவ்விதக்கொள்கை கிறிஸ்து

மத சித்தாந்தங்களுக்கும், வேத நீதிகங்களுக்கும் மாறான தென்பதாயிக் கருதப்படுகின்றது. அறிவிற்குப்பொருத்த மானவற்றை மதம் மறுப்பதாக இருப்பின், மதத்தின் மடமையை ஊன்றிப்பகுத்தறிவீர்களாக.

அகம்பாவமும் பயமுமே மதத்தின் சொரூபம்.

எந்த ஸ்தாபனம் அல்லது இயக்கத்தை எடுத்துக்கொண்டபோதிலும் அதன் பலமும் சிறப்பும் எதில் இருக்கின்றது? அதனுடைய முக்கிய கொள்கைகளின் உணர்ச்சி (Impulse) யிலேயும், அதனை எந்த சமூகம் (Community) ஆதரிக்கின்றதோ அதனுடைய மூலபலத்தையும், முற்போக்கையும் எவ்வளவு தூரம் அது மேலோங்கச்செய்கின்றது, என்பன இந்தஇரண்டிலேதான் இருக்கின்றதேதவிர வேறில்லை. சில இயக்கங்களில் இந்த உணர்ச்சி பகிரங்கமாகத் தெரிகின்றது; ஆனால் சிலவற்றுள் அந்தரங்கமாகவே அடங்கியிருக்கின்றது. உதாரணமாக, ஆல்பைன் கிளப் (Alpine club) எனும் சங்கத்தை எடுத்துக்கொள்வோம். அதன்முக்கிய நோக்கம் (Impulse) என்னவெனின் புதிய புதிய இடங்களைக்கண்டுபிடித்தலேயாம் (Adventures). மற்றப்படி, ஒரு வித்யாகலாசங்கத்தை எடுத்துக்கொண்டோமானால், அதன் நோக்கம் ஏதோ ஒரு ஞானத்தை விருத்தி செய்தலாகவே இருக்கும். தவிர, குடும்பம் எனப்படும் ஒரு ஸ்தாபனம் அல்லது ஏற்பாட்டை (Institution) எடுத்துக்கொண்டோமானால், அதன்நோக்கும் ஒருவருக்கொருவர் போட்டா போட்டியை உண்டுபண்ணி அக்குடும்பத்தாரை முன்னேற்றமடையச்செய்வதோடு, பரஸ்பர ஒற்றுமையும் அன்பும் (Parental feeling) ஓங்குமாறு செய்வதேயாகும். ஒரு உதைபந்து விளையாட்டுக்கூடம் (Foot ball club) அல்லது

ஒரு தேசியச்சங்கத்தை (Political party) எடுத்துக்கொண் டோமானல், அவற்றின் நோக்கம் ஒருவருக்கொருவர் போட்டா போட்டியுடன் ஒருங்கே வேலை செய்து திருப்தியும் ஆனந்தமும் அடைதலேயாகும். ஆனால் உலகத்திலே இப்போது மிக்க பிரபலமாகக் கருதப்படும் இரண்டு இயக்கங்கள், அல்லது ஸ்தாபனங்கள்—அதாவது, கிறிஸ்துமதத் திருச்சபை (Church), தேசபரிபாலனம் (State) என்ற இவற்றின் அந்தரங்க நோக்கங்கள் (Psychological motivation) நமக்கு ஒன்றும் நன்றாகத் தெரிகின்றதில்லை. தேசபரிபாலனத்தின் பூர்விக நோக்கம் ஏதுவெனின், தேசத்தை,—உட்கலகங்கள், வெளிப்போர்கள், என்ற இந்த இரண்டு (Internal Criminals and external enemies) விதத் தொல்லைகளினின்றும் பாதுகாத்தலேயாகும். இந்த ஸ்தாபனத்தின் போக்கு (Tendency) சிறு குழந்தைகள் பயப்படும்போது ஒன்றை ஒன்று கட்டிப்பிடித்துக்கொண்டு, தங்களைவிட உருவத்தில் பெரியவராக இருக்கும் ஒருவரிடத்தில் ஓடி அடைக்கலம் புகுந்து அபயம் பெறும் மனப்பான்மையினின்றும் ஏற்பட்டதெனலாம்.

கிறிஸ்துமத திருச்சபைகள் (the Church) ஏற்படுவதற்கான நோக்கம் இன்னும் மிக்க சிக்கலான அடிப்படையையுடையதாகும். மதம் எனும் ஓர் ஸ்தாபனம் ஏற்படுவதற்கு மூலகாரணம் சுருங்கக் கூறுமிடத்து மனிதரின் உளத்திலெழுகின்ற பயமே என்று சந்தேகமில்லாமல் துணிந்து கூறுவேன்—ஏன்!—இன்றைக்கும் பாருங்கள், மனிதர்கள் எப்போது கடவுளை நினைக்கின்றார்கள்? ஏதாவது பெரிய ஆபத்து அல்லது துன்பம் நேர்ந்துவிட்டால் அப்போதுதான் அவர்கள் தங்களை அறியாமலே ஆண்டவனைக் கருதத் தொடங்கு

கின்றார்கள். ஒரு யுத்தம், கொள்ளைநோய், கப்பல் கவிழ்தல்—முதலிய இவைகளே மனிதர்களை மத நம்பிக்கையுடையவர்களாகச் செய்கின்றன. மதம், பயத்தை ஆதாரமாகக் கொண்டிருப்பதோடு, மனிதப்பிறவிதான் சகலவற்றிற்கும் மேலானதென்ற தற்பெருமைக் குணத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது.

கிறிஸ்துமதமும், மனித ஜன்மமும்.

கிறிஸ்துமதம் உண்மையாக இருப்பின், மனித ஜன்மம் தற்போது காணப்படுவதுபோல் முழுவதும் மோசமாக இருக்கக் காரணமில்லை—ஏன்?—இவர்களைச் சிருஷ்டித்துப் பாதுகாக்கும் கடமை அவரையே (கர்த்தரையே = Creator) சார்ந்ததாக ஏற்பட்டுவிடும்; இவர்கள் தவறி நடந்தால் அவதிப்படுபவரும், நல்வழியில் நடந்தால் குதூகலிப்பவரும் அவரே யன்றோ! ஹா! அவருடைய மேன்மைதான் என்னே!!

ஒரு எறும்புக் கூட்டைப் பரிசோதனை செய்து அவற்றுள் எவை ஒருவித திராவகத்தை (Formic) உண்டாக்குகின்றன என்பதை அறிய முற்படுவதும், தத்தம் செயலை விடுத்துக் கண்டபடி சிறியும் எறும்புகளைப் பிடித்து எறிப்பதும்—ஆகிய விஷயங்களை ஒருவன் செய்தால் நாம் அதனை மஹாபாதகமான காரியம் என்போம். கடவுள் செய்யும் காரியமும் இதுபோன்றதேயாம். ஆனால் நமக்கு சாதகமானகாரியங்கள் அனைத்தையும் ஏதோ ஒருகடவுளே செய்வதாகஇருப்பின், அத்தகைய அடிமையைக் கொண்ட, மனித ஜன்மத்தின் மேன்மை தான் என்னே! மேலும் அவரே நம்மவருள் நல்ல காரியங்களைச் செய்பவர்களைப் பொறுக்கியெடுத்து, அவர்களுக்கு மட்டும் என்றும் மாறாத பரமானந்தத்தைச் சதா

கொடுப்பவராக இருப்பின் இன்னும் அவருடைய உபசாரத்தின் பெருமை தான் என்னே! தவிர, தற்காலத்திலே ஒரு சிலமதஸ்தர்கள் இன்னொரு சித்தாந்தத்தையும் கண்டுபிடித்திருக்கின்றார்கள். அதாவது இந்த உலகம் இந்த நிலைமைக்குப் படிப்படியாக (Cosmic evolution) வந்திருப்பதன் நோக்கம் மனித ஜன்மத்திற்கு "நன்மை" பயப்பதற்கேயாகும்—என்பதாம்; அதாவது உலகம் படிப்படியாக மகோன்னத ஆனந்த நிலைக்கே போய்க்கொண்டிருக்கின்றது என்பதாம். கர்த்தா (கடவுள்) எனப்படும் யாரோ ஒருவர் எங்கேயோ இருந்துகொண்டு, இங்குள்ள மனிதர்களுடைய ஆசைகளுக்கும், சுயநல ஆதிக்கத்திற்கும் தக்கவாறு திருவிளையாடல்கள் புரிந்து வருவதாக மனிதன் நினைப்பானேயாகில் அவனது தற்பெருமையை என்னென்றியம்புவது? (ஆதலின் நமக்கு மதம் வேண்டுமா, அல்லது மதத்தின் அழிவு வேண்டுமா!)

மத நீதியின் நியமம்.

மதத்திற்கு அடிப்படையாக இருக்கும் அங்கீக நோக்கங்களில் மூன்றாவதாக; அதன்கண்ணுள்ள "அறக்கோட்பாடுகளை"க் கூறலாம். மதத்தை ஒழிப்பதே தங்கள் சம்மதமாகக் கொண்டுள்ள வேத விரோதி (Free thinkers) களில் உட்படப் பலர், மதத்தின் நோக்கங்களில் ஒன்றாகிய, இந்த அறக்கோட்பாடுகளை மிக்க மேலானதாகவே கருதுகின்றார்கள். அவர்களுடைய இக்கூற்று எனக்குச் சம்மதமாகத் தோன்றவில்லை. மேற்கூறிய அறக்கோட்பாடுகளை விசாரணை முகத்தால் பரிசிலனை (Psychological analysis) செய்து பார்க்கும்போது, அவைகள் மனிதனுடைய கீழான அபாபசங்களாலிருந்துதான் உயிர்பெற்று முளைத்தெழுந்தி

ருப்பதாகத் தெரிகின்றது; ஆகவின் அவற்றை அறிவாளிகள் ஆதரிப்பது நேர்மை ஆகாதென்பதே என் முடிவான அபிப் பிராயம். தர்ம நீதி இன்னதென்பதை அறிய வேண்டிய வர்கள் அதர்ம நீதி இன்னதென்பதையும் கவனிக்கவேண் டும்; ஏனெனின் அவை இரண்டும் ஒருங்கே தோற்றப்படு வனவாம். தர்மம் இன்றேல் அதர்மம் இல்லை. அதர்மம் இன்றேல் தர்மமும் இல்லை.

அதர்மத்தின் தத்துவம்.

எனவே, "அதர்மம்" என்பது என்ன?—என்பதைப் பார்ப்போம். ஒரு கூட்டத்தாரால் (வகுப்பாரால்) எது தள்ளப் படுகிறதோ அதுவே அவ்வகுப்பாருக்கு "அதர்மம்" என்பதாக உலக வழக்கில் கொள்ளப்படுகின்றது. மேலும் அந்த விஷயத்தை "அதர்மம்" என்பதாக அக்கூட்டம் ஏற் படுத்துவதோடு, அதற்கென சாஸ்திர நீதி—நியமனச் சட்டங் களையும் உண்டுபண்ணி, அதற்கு மாறாக நடப்பவர்களை அக் கூட்டம் அந்த சாஸ்திரங்களின் பெயரால் தண்டிக்கவும் முற்படுகின்றது. ஒரு கூட்டத்தார் எது செய்யினும் அது நீதியே, தர்மமே! அதற்கு மாறாக ஒருவன் தன் தனிப்பட்ட நோக்கில் எது செய்யினும், (அது நன்மையே யானாலும், தீமையேயானாலும்) அநீதியே, அதர்மமே! மேலும், மேற் கூறியவிதமாகத்தண்டனைசெய்யும்போது, அக்கூட்டம் (herd) தனது குரூர குணத்தையே காட்டுவதாக இருப்பினும் அத் தர்ம நீதியெனும் சட்டப் பிரேமையால், தற்பெருமை (self-esteem) யும் அடைகின்றது. குற்றவாளிகளை மிகக் கொடூரமாகத் தண்டிப்பது (Lynching) முதலிய அக்கிர மங்களுக்கு அடிப்படையாக இருப்பது இந்த தர்ம நீதியே

னும் சித்தாந்தமேயாம். எனவே, தர்மக் கோட்பாடுகளின் சாராம்சம் என்னவெனின்,—கற்பின் பெயரால் மாதரைச் சொல்லொணுத் துன்பங்களுக்குள்ளாக்கும் பாதகம் (Sadism) போன்ற அக்கிரமங்களை, நியாயமாகக் காண்பிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அநீதமேயாகும்.

ஆனால், நீர் கூறியபோல் முற்கூறிய தர்மக் கோட்பாடுகளை உண்டாக்கியவர்கள் ஆதிகால ஹிப்ரு மஹான் (Hebru Prophets) களே யாதலின், அவர்கள் இவ்வித குற்றங்களையுடையவர்களாக இருந்தார்களென்பதற்கு ஆதாரமில்லையே என்பதாக ஒரு சிலர் என்னைக் கேட்கலாம். இவர்கள் கூறுவது உண்மையே. ஹிப்ரு மஹான்கள் வெளியிட்ட தர்மக்கோட்பாடுகள் யாவும், அவர்களாலும் எஹோவாவாலும் (கர்த்தராலும்) ஒப்புக்கொள்ளப்பட்டனவேயாகும். பக்தர்களவர் (Apostles) களும் தங்களுடைய 'கட்டளை'களிலே அதே அபிப்பிராயத்தைக் காட்டுகிறார்கள். "பரம பிதாவிற்கு எது நன்மையாகத் தோன்றுகிறதோ அதுவே எங்களுக்கும் சம்மதம்" (Act XV, 28). ஆனால் இவ்விதமாக, கர்த்தரின் கருத்துக்களை, ஒருதனிப்பட்ட மனிதன் கூறும் அத்தாக்ஷியைக் கொண்டு அங்கீகரித்து அதனையே ஆதாரமாகக் கொண்டு இயங்கும் எந்த இயக்கமும் பலனடையாதென்பது திண்ணம். ஏன்?—ஓர் புதிய மஹான் ஒருகாலத்தில் தோன்றி தான் கூறுவதுதான் கர்த்தரின் சம்மதம் பெற்றது என்பதாக பறைசாற்றுவாரெனின், எது உண்மை, எது பொய் என்பதை எவ்வாறு இக்காலத்திய கிறிஸ்துமதம் நிலைநாட்ட முடியும்! இந்த எண்ணமே இப்போதும் புராட்டஸ்டெண்ட் கிறிஸ்தவர்களைக் கலங்கவைத்தவாறி

ருக்கின்றது. இந்த எல்லாம் பேலோங்கியதால்தான், சுவி சேஷ மார்க்கம் (Protestantism), பல்வேறு சிறு பேத சமயங்களாக (Sects) சிதறுண்டு, ஒன்றையொன்று தாக்கிப் பலன் குன்றிக் கிடக்கின்றது. இன்னும் ஒரு நூறு வரு டங்களுக்குள்ளாக இந்தச் சுவிசேஷ மார்க்கம் என்ற பெயரே இல்லாமற் போய்,—கிறிஸ்து மதம் என்றால் பொது மதம்—என்பதாக மாறிவிடும் என்பதில் தடையில்லை. கத் தோலிக்கத் திருச்சபையினர்—மஹான்கள் எனப்படுவோர் ஞானோதயம் (Inspiration) பெற்றவர்கள், என்ற கொள் கையை ஆதரிக்கின்றனர். ஆனால் அவ்வித ஞானோதயம் கர்த்தரிடத்திருந்து வரினும் வரும், இன்றேல் சாத்தான் இடத்திருந்து கிளம்பினும் கிளம்பும்; எனவே, எது எத்த கையது என்பதை நிச்சயப்படுத்தும் பொருப்பு திருச்சபை (Church) யின் மனப்பான்மையைச் சார்ந்ததேயாகின்றது. ஒரு சிற்ப சாஸ்திரத்தை வளர்க்கும் சங்கம் எவ்வாறு ஒரு சித்திரத்தின் கர்த்தா லியனார்டா (Leonardo)வா, அல்லது அவர் பெயர் கொண்ட ஒரு போலி லியனார்டாவா என்ப தைப் பரிசீலனை செய்கின்றதோ, அதே மாதிரிதான் திருச் சபையும் தனது காரியத்தை நடத்தவேண்டியிருக்கின்றது. இம்மாதிரியாகத்தான், ஆகமங்களும் வேத சுருதிகளும் (Revelations) திருச்சபையாகிய மதத்திலே தோன்றலா யின. மததர்மக் கோட்பாடுகளும் இம்மாதிரியாகத்தான் அது சமயம் ஏற்பட்டிருக்கவேண்டும். மதத் திருச்சபை எந்த விஷயத்தை ஆதரிக்கின்றதோ அதுவே தர்மம்; எதை பகிஷ்கரிக்கின்றதோ அதுவே அதர்மம். எனவே தர்மகோட்பாடுகளின் அந்தரங்க மர்மம் என்னவெனின், ஒரு கூட்டத்தாருடைய விருப்பும் வெறுப்புமேயாம்,

மதத்தின் நோக்கங்கள்.

நாம் செய்த விசாரணையினின்றும் "மதம்" என்ற ஓர் இயக்கம் மக்களிடையே ஏற்பட மூலகாரணங்களாக இருப்பன, மாந்தரின்பயமும், தற்பெருமையும், துவேஷகுணமுமே யாகும் என்பது வெளிப்படை. மனிதனுடைய ஆசாபாசங்களுக்கு ஓர் மேலான மரியாதை கொடுப்பதே மதத்தின் கோட்பாடு எனக்கூறினும் நன்குபொருந்தும். மனிதனுடைய துயரத்துக்குக்காரணம் இந்த ஆசாபாசங்களேயாதலின், இவற்றைப்பராமரிக்கும் மதமும் மனித சுகத்தைத் தகர்க்கும் கோடரிக்காம்பு எனினும் மிகையாகாது. இந்த ஆசாபாசங்களுக்கு மதம் இம்மாதிரியான ஒரு பெருமையைக் கொடாதிருப்பின், மனிதன் அவற்றை அடக்கியாள ஆரம்பித்து வெற்றிபெற்றிருத்தல் கூடும்.

மதாபிமானிகளின் ஓர் எதிர்ப்பு.

இந்த இடத்தில், மதத்திற்கு ஆதாரமாகக்கூறப்படும் ஒரு சமாதானத்தைச் சற்று கவனிக்கவேண்டியதிருக்கிறது. அது பின்வருமாறு; பயம், துவேஷ குணம்—என்பன இரண்டும் மனிதர்களிடத்தில் தோன்றப்படும் இயற்கைக்குணங்களேயாம். மனித சமூகத்தில் அவை எக்காலத்தும் இருந்தே இருக்கின்றன; இனியும் இருந்தே தீரும். எனவே அவற்றை நல்வழியில் செலுத்தி, தீமைபுரியா வண்ணம் செய்ய வழிதேடுவதுதான் அறிவுடைமையாகும். காமத்தால் ஏற்படும் தீமைகளை யொழிக்க மக்கள் சமூகத்தில் பெண்கள் சார்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைப்போன்றே, மேற்கூறிய இரண்டு குணங்களைப்பொருத்த மட்டிலும் கிறிஸ்துமதவேதவைதிகர்கள் (Theologians), திருச்சபையின் மூலமாக தர்மக்கோட்பாடுகளை நியமித்திருக்கின்றார்கள். விபசாரத்தால் ஏற்படும்

கெடுதல்களைத் தடுப்பதற்காகவே, கலியாணம் என்ற ஒரு நியமனும் ஏற்பட்டது. அதே போல், துவேஷகுணம் மக்களிடத்தே எப்போதும் இருந்தே தீரவேண்டியதாதலின், அதனை உண்மையாகவே கெடுதல்கள் புரிபவர் மீது செலுத்தி நன்மையைப்புரிதலும்மேன்மையே. அதைத்தான் திருச்சபையானது தர்மக்கோட்பாடுகள்* என்ற நியமனத்தால் செய்கின்றது என்பதாக மதஸ்தர்கள் சமாதானம் கூறக்கூடும்.

எதிர்ப்புக்கு மறுப்புகள்.

இந்த எதிர்ப்பிற்கு நான் கூறப்புகும் சமாதானம் இருவகைப்படும்—முதலாவது மேற்போக்காகக் கூறப்படும் சமாதானம்; மற்ருென்று ஊடுருவிப் பரிசீலனை செய்துகூறும் மறுப்பு. கிறிஸ்து மதத்திருச்சபையின் தர்மக்கோட்பாடுகள் உண்மையில்மேலானதல்லவென்பது முதலாவது சமாதானம்; பயம், துவேஷம் என்னும் இவ்விரண்டு தீமைகளையும், ஆத்மதத்துவ (Psychological) ஆராய்ச்சியாலும், பூத பௌதிக தத்துவ சாஸ்திர விசாரணையாலும், மனித சமூகத்திலிருந்தே தூரத்திவிடலாம் என்பதாகக்கூறும் மறுப்பு.

முதலாவது சமாதானம் என்னவெனின், திருச்சபையின் தர்மக்கோட்பாடுகள் மனித சமூகத்தின் முற்போக்குக்கு ஏற்றதல்ல என்பது; ஏன்?—அவைகள் மனிதனுடைய அறிவையும், ஆராய்ச்சியையும் (Science and intelligence) உதாசீனம் செய்கின்றது. அவைகள் இக்குற்றத்தை என் கொண்டதாக இருக்கின்றதெனின், அவற்றிற்கு ஆதாரமாக இருக்கும் சுவிசேஷத்தில் (Gospel) அவை காணப்படுதலினுலேயாம் கிறிஸ்துநாதர், நம் எல்லோரையும் குழந்தையைப் போல் ஆகும்படி உபதேசிக்கின்ருர். எல்லாரும் குழந்தை போல் ஆகிவிட்டால் நாம் கணிதத்தின் (Differential

Calculus etc) முடிவைக்காண்பது எங்ஙனம்? நாணயச் செலாவணி (Principles of Currency) சித்தாந்தங்களைக் கையாடுதல் எப்படி? வைசூரி, மலேரியாபோன்ற கொடிய வியாதிகளை எதிர்த்துச்சமாளிப்பது எவ்வாறு?—இவ்வித நன்மைகளை அடைய மனிதன் தலைப்படுவது,—இந்தக் கிறிஸ்தவத் திருச்சபைகளின் தர்மக்கோட்பாடுகளின் பிரகாரம்—அதர்மமேயன்றோ! ஆனால் இப்போது திருச்சபை கல்வியானத்தை எதிர்ப்பதில்லை, என்பது உண்மையே. அது ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் அவ்வாறு செய்தே வந்தது. ஏன்?—கல்வியபிவிருத்தியால் அறிவு விசாலமடையுமெனின் அறிவு ஆதிக்கம் பெற்றுவிடும்; அப்போது கிறிஸ்துமதக் கோட்பாடுகளை எதிர்க்க நேரிடும்—ஆகலின் கல்வியானம் படுமோசம் என்பதாகப் பறைசாற்றப்பட்டு வந்தது. இங்கே நான் கூறும் ஒரு உதாரணத்தை ஆராய்ந்து பாருங்கள். இரண்டு மனிதர்கள் ஒருவன் தன் தீவிர முயற்சியாலும், அபார ஆராய்ச்சியாலும், ஒரு கொடிய விஷ ஜுரத்தின் (Yellow fever) காரணத்தைக் கண்டுபிடித்து அதற்குப் பரிகாரமும் காட்டி மக்களுக்கு நன்மை பயக்கின்றான்; ஆனால் அவ்வப்போது தான் மணம் புரியாத பிறஸ்திரீகளிடத்தே சகவாசம் செய்கின்றான். மற்றொருவனோ, மஹாசோம்பேறி ஒரு தொழிலும் செய்யாதான்; வருடமொரு குழந்தைப் பெற்று அவனது அருமை மனைவியை மண்ணுக்கிரையாக்கினான்; தனது குழந்தைகளைப் பராமரிப்பதில் கவலை சிறிதேனும் செலுத்தவில்லை; ஆதலின் அவற்றுள் பல சிறு வியாதிகளுக்கே இரையாயின; ஆனால் அவன் மட்டும் தன் மனைவியைத்தவிர பிறஸ்திரீகள் எவரையும் ஏறிட்டுப்பார்த்தானில்லை—இவர்களிருவரிலே யார் பெரியர்? யார் சிறியர்?

இரண்டாமவனோ சற்குணமுள்ளவன் என்பதாக, ஒரு நல்ல கிறிஸ்தவனைக் கேட்டால் வாய்கூசாமல் கூறுவான். இக்கிறிஸ்தவனுடைய மனப்பான்மை,—மூடக்கொள்கையும், அறிவற்ற தன்மையும் ஆகும் என்பதை, மறுப்பார் எவரேயுளர்? ஆனால், பாவத்தைத் தவிர்த்தலே, நன்மையைக் கடைப்பிடித்தலினும் மேல்; மதக்கோட்பாடுகளுக்குக் கட்டுப்படுவதே, அறிவு விளக்கத்திற்கு ஆட்படுதலைவிட உயர்ந்தது—என்ற மௌட்டீக மனப்பான்மை மக்களிடத்தே இருக்கும்வரையில் மேற்கூறிய ஆபாச நிகழ்ச்சிகள் மேன்மையாகவே கருதப்படும் என்பதில் தடையில்லை.

இரண்டாவது சமாதானம் கிறிஸ்துமதத் திருச்சபையானது தனது பற்றுக்கோடாகக்கொண்டு ஆதரிக்கும்படியான இந்த பயம், துவேஷம் என்ற இவ்விரண்டு பீடைகளையும் மனிதன் தன் கல்வி கேள்விகளாலும், தேச வர்த்தமான ஆராய்ச்சியாலும், தேசியசீர்திருத்தங்களாலும் அறவே ஒழிக்க முடியும் என்பதாம். மூடப்பழக்க வழக்கங்களாம் பாவ புண்ணியங்களென்னும் மதத்துறைக் கோட்பாடுகள் கட்டவிழ்ந்து விழவேண்டுமானால், மக்களின் கல்விமுறை முதலில் சீர்திருத்தப்படவேண்டும். மௌட்டீகத்திற்கு மருந்து கல்வி அறிவே. பயத்தையும் துவேஷத்தையும் மக்களிடத்தே இருப்பதை உணர்பவன், அதன் அருமை பெருமைகளைப் போற்ற ஆரம்பிப்பதோடு அவற்றை நிரந்தரமாக்கவும் முற்படுகிறான். அவைகள் அவன் மனதிலும் அவனை அறியாமலே புகுந்து ஆட்டுவிக்கின்றது. சாதாரண ஓர் கிறிஸ்தவ மகன் இந்நிலையிலேயேதான் இருக்கின்றான். மனிதனுடைய உள்ளத்திலிருந்து பயத்தைப்போக்கும்படியான மாதிரியில் கல்வியளிப்பது அசாத்தியமான காரியமல்ல. அவ்வித

கல்வி இளங் குழவிப் பருவத்திலிருந்தே ஆரம்பிக்கப்படவேண்டும். குழந்தையை அன்புடன் பேசி. சீரிய நோக்கங்களும் பரந்த எண்ணங்களுமுடையவர்களுடைய சகவாசம் ஏற்படும்படி செய். இருட்டிற்கும், சுண்டெலிக்கும், கரப்பூச்சிக்கும் பயப்படும்படியான கேவல—கோழைமனமுடைய மனிதர்களுடைய உறவு கலவாதிருக்கும்படி. இளஞ்சிங்கங்களைக் காப்பாற்று.

திட்டலும், கிட்டலும், மிரட்டலும், புரட்டலும் அவனை அணுகவிடாதே. இவ்விதமாக குழந்தைகள் வளர்க்கப்படுமானால் அவர்களிடத்தே பயம் என்பது எவ்வாறுதோன்றும். துவேஷ குணத்தைப்போக்குதல் சற்று பிரயாசையே. பொறாமைமனத்தில் ஏற்படாதவாறு சகல குழந்தைகளையும் ஒரே மாதிரியாக வளர்க்கவேண்டும். தனது நன்மையைக்கோறி அன்பைச்சொரியும் ஒருசிலர் சதா இருக்கின்றனர் என்பதை அக்குழந்தை உணரவேண்டும். தனது இயற்கைப்பிரகாசம் தனியே விடப்படுவதோடு, தனக்கு ஆச்சரியகரமாகத் தோன்றும்,—தேக செளக்கியத்துக்கும் உயிருக்கும் ஹானி ஏற்படுத்தக்கூடிய விஷயங்களைத்தவிர மற்ற எல்லா—காரியங்களையும் மனம்போலச்செய்யும்படி விட்டுவிடவேண்டும். பெண்கள் சம்பந்தமான எல்லா ஞானமும் பகிரங்கமாக்கப்படுவதோடு, பாமரமக்கள் குழந்தைகள் அறியக்கூடாதெனத் தற்காலத்தில் மறைத்து மறைத்துவைக்கும் எல்லா சமாச்சாரங்களையும் நமது குழந்தைகள் அறியும்படியாக விட்டுவிடவேண்டும். இந்த சுலபகரமான விஷயங்களை நாம் அனுஷ்டிப்போமானால் நமது குழந்தைகள் பயமென்பதேயின்றி பூவும் மணமும்போல சகோதர பாவனையுடன் ஒன்றிவாழ்வர் என்பது திண்ணம், (தற்கால உபாத்தியாயர்கள் இதனை நன்கு கவனிப்பார்களாக)

இவ்விதமாக வளர்க்கப்படும் குழந்தைகள் உலகவாழ்க்கையிற் புகும்போது அநேக அதிக்கிரமங்களையும், அநியாயங்களையும், துக்ககரமான சம்பவங்களையும் குறுக்கிட நேரிடுமென்பது உண்மையே. உலகத்திலே நாம் காணும் மேற்குறித்த அநியாய அக்கிரமங்களும், துக்க சம்பவங்களும் இறந்த காலத்திலிருந்தே முளைத்தெழுந்தவெனலாம். ஆதியில் உயிர்வாழ்வதற்கென போட்டாபோட்டி எல்லா உயிர்களிடத்தும் இருந்தேவந்தது. இன்றும் அது ஒழிந்தபாடில்லை. மக்கள்படும் துயரமெல்லாவற்றிற்கும் மூலகாரணம் வாழ்க்கைக்கு ஆதாரமான பொருளே—பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை. இப்போது நாம் அறிந்துள்ள விவசாய வியாபார ஏற்பாடுகளால், உயிர்வாழ் மாந்தர் அனைவருக்கும் வயிறார உண்ண உணவளிக்கலாமென்பதில் தடையென்ன? உலகத்திலே ஜனத்தொகை அளவுக்கு மீறிப்போகாமலிருக்க அதற்கென அனுஷ்டிக்கவேண்டிய முறைகளையும் நாம் அறிவோம். ஆனால் அவ்வித முறைகளை அறிவுடைய மக்கள் கையாடாவண்ணம் தடைசெய்துவருவது எது? மக்கள் பாழும் சண்டையில் மண்டையுடைபடினும் படட்டும்,- பஞ்சத்தால் நைந்துருகி நசித்தாலும் நசிக்கட்டும், ஆனால் கர்ப்பத்தடைமட்டும் கூடாது என்பதாகக்கூறும் கிறிஸ்தவ திருச்சபையின் மதக்கோட்பாடன்றோ. பூவுலகிலே மக்கள் தடையற்ற ஆனந்தத்தோடு வாழமுடியும். அதனை அடையும் வழியும் சுலபமே. ஆனால் அவ்வாறு ஆனந்தத்தை அடையவிடாமல் தடைசெய்யும் முட்டுக்கட்டை எது? மத சம்பிரதாயங்களே என்பேன்! அறிவு விளக்கம்பெறும் உண்மை ஞானத்தை—கல்வியை—நமது குழந்தைகள் பெறமுடியாமல் மறைத்து நிற்பது மதமே; வல்லரசுகள் பெருமிதத்தால் வெம்போர் செய்வதற்கு மூலகாரணமானவற்றைத் தகர்த்

தெரிய மனிதனை விடாமல் தடைசெய்து வருவதும் மதமே; அபாச பாவபுண்ணியங்களெனும் அறக்கோட்பாடுகளுக்குப் பதிலாக மனிதன் சமதர்ம தத்துவத்தைப்போதிக்க முடியாமல் தடைபுரிவதும் மதமே. மன்னுலகத்தைப் பொன்னுலகமாக்கலாம். ஆனால் அப்பொன்னுலகத்தின் தலைவாயிலிலே ஓர் மாபெரும் பேய் (Dragon) சதா இருந்துகொண்டு மனிதனை உள்ளேபுகவொட்டாமல் தடைசெய்கின்றது. அதனை நாம் மாய்க்கவேண்டும். அம்மாபெரும்பேய் மதமே.

சென்ட்ரல் பிரஸ், ஈரோடு.

பகுத்தறிவு வெளியீடுகள்.

		ரூ.அ.பை.
1.	பெண் ஏன் அடிமையானாள்?	0—5—0
2.	முன்னேற்றத்திற்கு மதம்முட்டுகட்டை	0—5—0
3.	(இங்கர்சாலின் சொற்பொழிவு) 'கடவுள்'	0—5—0
4.	நான் ஏன் கிறிஸ்தவனல்ல?	0—3—0
5.	நான் சம்சயவாதி யானதேன்?	0—3—0
6.	மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?	0—3—0
7.	மதம் என்றால் என்ன?	0—2—0

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம்.
லிமிட்டெட், ஈரோடு.